உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

No.—
26 JUN 1922

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

*(ALL RIGHTS RESERVED.)*

| தொகுதி 7 | துந்துபிஸு வைகாசிமீ கஉ<br>1922ஸு மேமீ 14உ | பகுதி 11 |
|---|---|---|

## கடவுள் வணக்கம்.

கருமருவு குகையனைய காயத்தி னடுவுட்
    களிம்புதோய் செம்பனைய யான்
காண்டக விருக்கநீ ஞானவனன் மூட்டியே
    கனிவுபெற வுள்ளு ருக்கிப்
பருவம தறிந்துநின் னருளான குளிகைகொடு
    பரிசித்து வேதி செய்து
பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட
    பக்ஷத்தை யென்சொல் லுகேன்
அருமைபெறு புகழ்பெற்ற வேதாந்த சித்தாந்த
    மாதியா மந்த மீதும்
அத்துவித நிலையரா மென்னையாண் டுன்னடிமை
    யானவர்க ளறிவி னூடும்
திருமருவு கல்லா லடிக்கீழும் வளர்கின்ற
    சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
    சின்மயா னந்த குருவே.

---

தானே யகண்டா காரமயக் தன்னி லெழுந்து பொதுநடஞ்செய்
வானே மாயப் பிறப்பறுப்பான் வந்துன் னடிக்கே காங்கூப்பித்
தேனே யென்னைப் பருகவல்ல தெள்ளா ரமுதே சிவலோகக்
கோனே யெனுஞ்சொன் னினதுசெவி கொள்ளா தென்னே கூறாயே.

கூறா நின்ற விடர்க்கவலைக் குடும்பக் கூத்துட் டுளைந்துதடு
மாறா நின்ற பாவியைநீ வாவென் றழைத்தா லாகாதோ
நீறார் மேனி முக்கணுடை நிமலா வடியார் நினைவினிடை
யாறாய்ப் பெருகும் பெருங்கருணை யரசே யென்னை யாள்வானே.

## அரும் பொருள் விளக்கம்.

1. கருமருவு=கருப்பையிற் பொருந்தி, காயம்=தேகம், கனிவு பெற உள்ளுருக்கி=உள்ளே யிளகியுருகச்செய்து, அத்துவித நிலையராய்=இரண்டற்ற ஐக்கியநிலை யடைந்தோராகி,

தேகத்தை ஒரு மூசிக்கும், ஆணவமலம் பொருந்திய ஆன்மாவைக் களிம்புள்ள செம்பிற்கும், ஈசுவரனுடைய அருட்சத்தியை குளிகையென்ற பரிசன வேதிக்கும் ஒப்பிட்டுக் கூறுகிறார்.

ஜீடனுடைய இருவினையொப்பு மலபரிபாகமறிந்து ஆசான் ஞானோபதேசம் செய்தலைப் 'பருவமதறிந்து நின்னருளான.........வேதிசெய்து' என்றார். மலம் நீங்கப்பெற்ற ஆன்மா சிவத்தோடு இரண்டற்ற ஐக்கிய நிலையடைதலைப் 'பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட பட்சம்' என்றார்.

"தேகமாகிய குகையில் களிம்புள்ள செம்புபோன்றிருந்த என்னை ஞானமாகிய அக்கினியினால் உள்ளுவ்ளே யிளகி யுருகச்செய்து பக்குவமறிந்து உன் அருட்சத்தியால் என் மலத்தை நீக்கித் தானுக்கிக்கொண்ட கருணையை யென்னென்று கூறுவேன்" என்றதாம்.

"கல்லாலடிக்கீழும்...முத்திமுதலே" என்றது, ஜனக ஜனுதிகளுக்குக் கல்லாலின் கீழமர்ந்து சின்முத்திரைக்குறியால் ஜகஜீவபர ஐக்கிய நிலையைக் காட்டியருளிய தக்ஷிணாமூர்த்த சொரூபத்தை.

"சிரகிரி.........குருவே" என்றது, சுவாமிகள் சிரகிரி என்ற திரிசிரபுரத்தில் (திருச்சினுப்பள்ளி) உள்ள தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் நிஷ்டையப்பியாசித்தபடியால் அந்த மூர்த்தத்தைக் குருமுகமாகத் தோத்தரித்ததாம்.

2. அகண்டாகாரமயம்=சர்வவியாபகமான நிலைமை, பொதுநடம்=பஞ்சகிருத்தியத்தாண்டவம், மாயப்பிறப்பு=மாயாசம்பந்தத்தாலுண்டான பிறவி, நினது செவிகொள்ளா தென்னோ?=உனது செவியில் ஏற்றுக் கொள்ளாதிருப்பது என்னகாரணமோ?

3. நீரூர்மேனி=விபூதிபொருந்திய திருமேனி. வெண்மை நிறமுடைய திருநீறு சுத்தசத்துவத்தையும், ஆனந்த நிலையாகிய மோக்ஷம் அல்லது ஞானத்தையும் குறிக்கிறது. பரமசிவம் நீறு பூசி யிருப்பது அவர் ஞானமே திருமேனியாக வுடையவர் என்பதைக் குறிக்கின்றது.

முக்கண்=மூன்றுவது கண்ணுகிய நுதற்கண். திரிமூர்த்தி சொரூபங்களும் ஒன்று சேர்ந்த துரிய பரம் பொருளாகிய பரப்பிரம்மம் ஞான சொரூபமாதலால் அதற்கு ஞானமாகிய மூன்றுவது கண் உண்டென்று வேதங் கூறுகிறது.

# ஆனந்தபோதினி

துந்துபிஸு வைகாசிமீ கவ

## கைத்தொழிலும், கல்வியும்.

உலகில் செல்வமும் சிறப்பும் பெற்றிருக்கும் ஒவ்வொரு நாடும் கைத்தொழில், வர்த்தகம் இவைகளாலேயே அத்தகைய மேலான நிலைமையை யடைந்திருக்கிறது. கைத்தொழில் வர்த்தகத்தை வளர்க்கிறது. புண்ணிய பூமியாகிய நம் பரதகண்டத்தில் கைத்தொழிலுக்கும் வர்த்தகத்திற்கும் அவசியமான இயற்கைப் பொருள்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. இவ்வாறு உலகில் வேறெந்த நாட்டிலுமில்லை. விவசாயத்திற்கும் இங்குள்ள செழிப்பான பூமியைப்போல் வேறெங்கும் கிடையாது.

இதனால் பூர்வீக முதல் இரண்டொரு நூற்றாண்டுகளுக்குமுன் வரையில் நமது நாடு வர்த்தகத்தில் முதன்மை பெற்று விளங்கியது. அநாகரீக நிலைமையிலிருந்து நாகரீகமடைந்த ஒவ்வொரு தேசமும் அவ்வாறு நாகரீக மடைந்ததற்குக் காரணமா யிருந்தவற்றில் மிக முக்கியமானது இந்தியாவின் வர்த்தகமே. இந்தியா, ஆப்கானஸ்தானம், பாரசீகம் இவற்றின் வழியாகவும், செங்கடல் வழியாகவும் மேல் நாடுகளோடு வர்த்தகம் செய்துகொண் டிருந்தது.

இவ்வாறு கைத்தொழிலும், வர்த்தகமும் மலிந்த நம் தாய்நாடு, உலகிலுள்ள நாடுகளுக்கெல்லாம் பஞ்சு, பருத்தித்துணி, சணல், பட்டு, நீலம், செம்பு, வைரம், முத்து, ஏலம், இலவங்கம், ஜாதிக்காய் முதலிய வாசனைத் திரவியங்கள் யாவும் உதவிக்கொண்டிருந்த நம் நாடு, இப்போது கட்டத் துணிக்குக்கூட அன்னிய நாட்டை எதிர்பார்க்கும் நிலைமைக்கு வந்துவிட் டிருக்கிறது. இதற்குக் காரணம் கைத்தொழில் நசித்துப்போனதே யாகும். கிழக்கு இந்திய (வர்த்தக) சங்கத்தார் (ஈஸ்ட் இண்டியா கம்பெனி) இத்தேசத்தில் வந்து நிலைத்தபோது நெசவு முதலிய கைத்தொழில்கள் இங்கு

மலிந்திருந்தன. அந்தோ! அண்டை வீட்டுக்காரனை யழித்தேனும் தான் வாழவேண்டுமென்ற எண்ணம் மனிதரில் பெரும்பாலார்க்கு இயற்கையா யமைந்த குணமன்றோ! ஆகவே அவர்கள் தங்கள் நாட்டுப் பொருள்கள் இங்கு அதிகமாகச் செலவாக வேண்டும், தங்கள் ஜாதியார் நல்ல பொருள் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணங்கொண்டு பல வழிகளாலும் இந்நாட்டுக் கைத்தொழில் நசித்துப்போகச் செய்தார்கள்.

நமது நாட்டாரில் கைத்தொழில் செய்வோரும் வர்த்தகம் செய்வோரும் கல்வியை யலட்சியம் செய்வது இயற்கையா யிருந்து வருகிறது. வர்த்தகர் தம் பிள்ளைகளுக்குச் சாதாரணமாகக் கணக்கெழுதும் வரையாவது கல்வி கற்பித்துப் பிறகு "இன்னம் ஏன் பள்ளிக்குச் செல்வது? இவ்வளவே போதும்; இனி கடையில் வந்து பழகட்டும்" என்கிறார்கள். ஆனால் கைத்தொழில் செய்வோரோ, சிறு வயதிலிருந்தே "நமக்குப் படிப்பேன் வேலையைக் கற்றுக்கொண்டால் போதும்" என்கிறார்கள். இவர்களுக்குக் கல்வியில்லாததே இத்தொழில்கள் தலை யெடுக்காமற் போவதற்குக் காரணம். இதனால் வேறு பல கெடுதிகளும் நேர்கின்றன.

கைத்தொழில் நசிந்தபோது மேற்கண்ட கம்பெனியாராகிய துரைத்தனத்தாரிடம் சேவகா விர்த்தியில் ஜீவனத்திற்கு வழி யுண்டாயிற்று. ஆரம்பத்தில் ஆங்கிலபாஷை கொஞ்சம் எழுதப் பேசத் தெரிந்துகொண்டால் ஒரு உத்தியோகம் கிடைக்கும். ஜனங்களுக்கு ஆங்கிலம் தெரியாது. ஆதலால் புது துரைத்தனத்தின் முறைமையும், அதற்கும் நமக்குமுள்ள சம்பந்தத்தின் மாதிரியும் ஒன்றும் தெரியாது. துரைத்தன விஷயமான எதை யறியவேண்டுமாயினும், ஆங்கிலம் கற்று துரைத்தனத்தாரிடம் உத்தியோகம் செய்வோர் மூலமாகவே அறியவேண்டும். இதனால் உத்தியோகம் செய்பவர்கள் மிக்க கௌரவ முடையவர்களாகக் கருதப்பட்டனர். கடைசியில் ஆங்கிலம் கற்பதும், துரைத்தனத்தாரிடம் சேவகம் செய்வதும் யாவற்றிலும் கௌரவமானவைகளாகக் கருதப்பட்டன. "ஐந்து ரூபா சேவகமானாலும் கும்பினி சேவகத்துக்குச் சமானம் வராது" என்று பழமொழியே வழங்கத் தலைப்பட்டது. "அதமம் சேவகாவிர்த்தி" என்ற முன்னோர் நீதி மறக்கப்பட்டது.

துரைத்தன விஷயமே யொன்றும் தெரியாத ஜனங்கள் "நாம் கொடுக்கிற வரிப் பணத்தில் சம்பளம் பெற்றே இராஜாங்கம் நடை

பெற இவர்கள் வேலை செய்கிறார்கள்" என்பதை யுணராமல், குறைந்த உத்தியோகஸ்தனாயினும் அவனைப் பெரிய அதிகாரியாக மதித்து அவனுக்கு அஞ்சி நடக்கத் தொடங்கினார்கள். அதன்மேல் சேவகா விர்த்தியிலுள்ளோர் மற்றவர்களை - மிக்க பூஸ்திதியுடைய சீமானாயினும், பெரிய செல்வவந்தனாகிய வர்த்தகனாயினும் - சிறந்த கைத்தொழில் செய்பவனாயினும் - மிக்க தாழ்ந்தவராகக் கருதி நடத்தத் தொடங்கினார்கள். ஆகவே வரவர துரைத்தனத்தில் சேவகம் செய்வதையன்றி மற்ற கைத்தொழில், வர்த்தகம், விவசாயம் யாவும் இழிவான தொழில்களாகக் கருதப்பட்டன. இவர்களுடைய மக்களில் யாரேனும் ஆங்கிலம் கற்றால், அவர்கள் உடனே அத்தொழில்கள் இழிவானவை யென்று கருதத் தொடங்கி விடுகிறார்கள். அதோடு ஆங்கிலங் கற்காத தம் பெற்றோரையும் தங்களைக் காட்டிலும் அறிவிலும் நாகரீகத்திலும் தாழ்ந்தவர்களாகக் கருதி, அவர்களை யலட்சியமாய் நடத்தத் தொடங்கி விடுகிறார்கள். கைத்தொழிலாவது, வர்த்தகமாவது கல்வியின் உதவியைக்கொண்டு அபிவிர்த்தியும் சீர்திருத்தமு மடைவதற்குப் பதிலாக க்ஷீணதசையடையத் தொடங்கியது.

கல்வி அறிவைக் கூர்மைப் படுத்துகிறது. விவசாயம் செய்வோர் கல்வி கற்று அத்தொழிலைச் செய்தால் இன்ன விதமான மண் இன்ன விதமான சாரமுடையது, இன்ன பூமியில் இன்ன பயிர் விளையும், இன்ன பயிருக்கு இன்னவித எரு போடவேண்டும் என்பன முதலிய விஷயங்களையும், இரசாயன முறைகளால் எருக்கள் உற்பத்தி செய்யும் மார்க்கங்களையும் அறிந்து செய்வார்கள். விவசாயத்திற்கு வேண்டிய கருவிகளைக் காலத்தையும், கஷ்டத்தையும் குறைக்கும் விதமாகப் புது மாதிரியாய்த் தங்கள் புத்தியைக் கொண்டு அமைத்துக் கொள்வார்கள்.

நெசவுத் தொழில் செய்வோர் கல்வி கற்று அத்தொழிலைச் செய்தால் முதலாவது, தங்களுக்கு வேண்டிய இயற்கைப் பொருளாகிய பஞ்சில் எத்தனை விதங்கள் இருக்கின்றனவென்றும், அவற்றின் தாரதன்மியத்தையும், எந்தெந்த விடத்தில் என்னென்ன விதமான பருத்தி யுற்பத்தியாகிறதென்றும், எங்கே குறைந்த விலைக்குப் பஞ்சு கிடைக்குமென்றும், துணி நெய்தானபின் அதையெங்கே அதிக இலாபத்திற்கு விற்கலாமென்றும் இன்னும் இது சம்பந்தமான பல விஷயங்களையும் யறிந்துகொள்வார்கள். இன்னும்

தரி முதலியவற்றில் சீர்திருத்த முண்டாக்கி குறைந்த காலத்தில் அதிக துணி உற்பத்தி செய்வார்கள்.

அந்தோ! கல்வியில்லாக் குறையால் நமது நாட்டில் கைத்தொழில் செய்வோர் தங்கள் முன்னோர் எத்தகைய ஆயுதங்களைக் கொண்டு எம்மாதிரி வேலை செய்துவந்தார்களோ அதே மாதிரியே யின்னும் செய்துகொண் டிருக்கிறார்கள்.

நம் தாய்நாடு க்ஷேமமடைய வேண்டுமாயின் கைத்தொழில் வர்த்தகம் விவசாயம் இவை விர்த்தியடைய வேண்டும். இவை விர்த்தியடைய வேண்டுமாயின் இத்தொழில் செய்வோர்க்குக் கல்வி யளிக்கப்படவேண்டும். தாய்நாட்டின் க்ஷேமாபி விர்த்தியைக் கோரும் தேசாபிமானிகளாகிய சீமான்கள் இத்தகைய விஷயத்தில் சிரத்தை யெடுத்துக் கொண்டால் நமது நாடு முன்னேற்ற மடையும்.

அந்தோ! இன்னும் நம் நாட்டில் அனேகர் தேசமுன்னேற்றத்திற்கு அவசியம் செய்யவேண்டியது எது என்பதைக் கவனிக்காமலே பொருளைப் பலவழிகளில் செலவழிக்கிறார்கள். ஆனால் அவர்கள் அப்படிச் செய்வது அறியாமையால் அல்ல. கௌரவம் என்னும் மயக்கில் சிக்கித் திரண்டபொருளைச் செலவழிக்கிறார்கள். ஒரு காரியத்தில் பொது நலம் என்ற மேல்பூச்சுமட்டு மிருந்து, அது தேசமுன்னேற்றத்திற்குத் தற்சமயம் அவசியமானதாக விராவிடின், அதனால் கௌரவம் வேண்டுமாயின் எதிர்பார்க்கலாமே யன்றி மற்றபடி தாய் நாட்டிற்கு நன்மை யொன்றுமே கிடைக்காதென்பது திண்ணம்.

சமீபகாலத்தில் கூட நம் நாட்டுச்சீமான்களில் ஒருவர் ஆயிரக்கணக்கான பணத்தைச் செலவிட்டு நம் நாட்டிற்கு பயனளிக்காததும், ஆனால் அதற்குமாறாக வீண் செலவை யுண்டாக்கக்கூடியதுமான ஒரு காரியத்தைச் செய்திருக்கிறார். அந்தோ அப்பெருந்தொகையை வைத்து ஒரு தேசியப்பாடசாலை தாபித்திருந்தால் எவ்வளவோ நலமுண்டாகும். இது நம் தாய் நாட்டாரின் ஆசீர்வாதத்தை யளிக்கும். ஆனால் சிலர் இதை அலட்சியம் செய்துவிட்டு அதிகார வர்க்கத்தினரின் நன்மதிப்பையே பெரும் புண்ணியப் பேறெனக்கருதி அத்தகைய காரியங்களுக்கே பணத்தைச் செலவழிக்கிறார்கள்.

அந்தோ எப்போதுதான் நம்நாட்டா ரனைவர்க்கும் உண்மையான தேசபக்தி ஜனிக்குமோ, அதிகார வர்க்கத்தினர்க்குத் தாளந் தட்டிக்கொண்டு அவர்கள் நன்மதிப்பையே பெரிதாகக் கருதி தாய் நாட்டிற்கே தீங்கிழைக்கும் அற்ப குணம் எப்போது நம்மை விட்டொழியுமோ, நம் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்கு இடையூறு செய்வோர்களுக்கு உதவிசெய்ய நமக்குள்ளாகவே கட்சி பேதங்களை யுண்டாக்கும் கோடரிக் காம்புகளின் செய்கைகள் எப்போது அடங்கிவிடுமோ அன்றன்றோ நம் குறைகள் நீங்கும் காலம்; அன்றன்றோ பாரத மாதா தன் மக்களைக் கண்டு மகிழும் நாள்; அன்றன்றோ நம் தாய்நாடு தன் பூர்வீகப் பெருமையை யடையும் நாள்.

அந்த நாள் சீக்கிரம் வரவேண்டுமாய் நம் பாரத மாதாவாகிய பராசத்தியையும், பரம்பொருளையும் இடைவிடாது பிரார்த்திப்போமாக. ஓம் தத் ஸத்.

---

## ஜீவகாருண்யம்.

எனது தமிழ் நாட்டுச் சகோதரிகளே!

முற்காலத்தில் ஜீவகாருணியமே உருக்கொண்ட நம் நாட்டில் தற்கால நாகரீக மேலீட்டால் ஜீவகாருணிய மென்பது என்னவென்று தெரியாது, வீட்டு வாயிலுக்கு வரும் பசித்த பிச்சைக்காரருக்கும்கூட அன்னமிடாது வேலையாய் இருக்கிறேன் போ என்றுவது, என் வேலை செய்து சாப்பிடக் கூடாது என்றுவது சொல்லுவது வழக்கமாய்ப் போய்விட்டது. இவ்வழக்கம் அடியோடு நம் சகோதரிகளைவிட்டு அகல இறைவன் அருள் புரிவாராக. பெண்பாலாகிய யான் ஸ்ரீமத், இராமலிங்க சுவாமிகள் அருளிய ஜீவகாருணியத்தைப் படித்து என் சிற்றறிவுக்கு எட்டிய இச்சிறு வியாசத்தை வரைந்துள்ளேன். குற்றமிருப்பின் பொறுத்தருள்க.

பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை. (குறள்)

உலகில் மானிடராய்ப் பிறந்த நம் எல்லோருக்கும் தவம், தருமம், செல்வம், கல்வி முதலிய எல்லாவற்றிலும் மேலானது ஜீவகாருணியமே. ஜீவகாருணிய மென்பது ஜீவர்களிடத்தில் தயவு. ஜீவகாருணியம் ஒருவரிடத்தில் விளங்கும்போது அறிவு, அன்பு, பொறுமை, தெய்வபக்தி முதலியவைகளும் விளங்கும். ஜீவகாருணியம் மறையும்போது இவைகளெல்லாம் மறைந்துவிடும். இவ்விஷயங்கள் மறையவே எல்லாத் தீமைகளும் வந்துசேரும். ஆதலால் புண்ணிய மென்பது ஜீவகாருணிய மொன்றே யென்றும், பாவ மென்பது ஜீவகாருணிய மில்லாமை யென்றும் அறியப்

படும். ஜீவர்கள் பசி, தாகம், கொலை, பிணி, எளிமை இவைகளால் துன்பப் படும்போதாயினும், துன்பப்படுமென் றறிந்தபோதாயினும், கேட்டபோதாயினும், கண்டபோதாயினும் மனமிரங்கி உதவி புரிவதே ஜீவகாருணியமாகும். கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சீவர்களில் அநேகர் பசியாலும், துக்கத்தாலும், பிணியாலும், தாகத்தாலும், உண்ண உணவும் உடுக்க உடையுமின்றி மிகவும் துன்புறுவது எதனாலென்றால், முன் ஜனனத்தில் ஜீவகாருணிய மென்பதைக் கனவிலுங் கருதாது கடின நெஞ்சராகித் துன்மார்க்கத்தில் நடந்ததனாலேயே இந்தச் சன்மத்தில் கடவுள் விதித்த ஆக்கினைப்படி துன்புறுகிறார்களென அறியப்படுகிறது. முற்பிறப்பில் ஜீவகாருணியத்தை விட்டுத் துன்மார்க்கத்தில் நடந்த சீவர்கள் இப்பிறப்பில் கடவுள் அருளாக்கினையால் துன்பப்படுகிறபோது அவர்களுக்கு உபகாரம் செய்வது கடவுளுக்கு விரோதமாகாதோவென ஒரு கேள்வி வரக்கூடும். ஆனால் அது கடவுளுக்கு விரோதமாகாது. எப்படியெனில், கடவுள் தன் கட்டளைப்படி நடவாது குற்றம் செய்ததற்காகத் தமது சத்தியால் அவர்கள் பெறக்கூடிய நல்ல சுகபோகங்களைப் பெறவிடாது தாம் கொடுத்த செல்வங்களை யெல்லாம் விடுத்து அந்தச் சீவர்களுக்கு நல்லறிவு வரும் பொருட்டே அந்தத் தேகத்திலிருந்து நீக்கி வேறொரு தேகத்தில் விடுவிக்கின்றார். ஆதலால் அந்தச் சீவர்கள் சௌக்கிய போகங்களையிழந்து உண்ண உணவும் உடுக்க உடையுமின்றி வருந்தும்போது இரக்கமுள்ளவர்கள் அவர்கள் படுகிற வருத்தத்தைப் பார்த்து மனமிரங்கி அவர்களுக்கு வேண்டிய உதவிசெய்தால், அப்படிச் செய்தவர்களை நல்ல இரக்க மனமுடையவர்களென் றுணர்ந்து மேன்மேலும் செல்வத்தைப் பெறக்கடவார்க ளென்று சந்தோஷத்தோடு வரங் கொடுப்பாரேயன்றி கோபிக்கமாட்டார். கல்வி, அறிவு, செல்வம் முதலியவைகளைக் குறித்து வருத்தப்படுகிறவர்கள் தங்கள் தரத்துக்குத் தக்கபடி பசித்த ஏழைகளுக்குப் பசியை நிவர்த்திப்பதையே ஒரு விரதமாகக்கொண்டு அனுசரிப்பார்களானால் அந்த ஜீவகாருணிய அனுசரிப்பு, கல்வி, அறிவு, செல்வம் முதலியவைகளை உண்டுபண்ணு மென்பது நிச்சயம். பசித்த ஏழைகளுக்குப் பசியை ஆற்றுவிப்பதே ஒரு விரதமாகக்கொண்ட ஜீவர்களுக்குக் கோடையில் வெயிலும் வருத்தாது, மண்ணும் சூடுசெய்யாது, பெருமழை, பெருங்காற்று பெரும்பனி, பேரிடி முதலியவைகளினாலும் துன்பமடைய மாட்டார்கள். பசித்தவர்க்குப் பசியை நீக்குகின்ற விஷயத்தில் யார்யாரைத் தடுத்தாலும் அந்தத் தடைகளால் சிறிதுந் தடைபடாமல் அவரவர் செய்த நன்மை தீமைகள் அவரவரைச் சேருமே யல்லாது வேறிடத்தில் போகாதென்பதை உண்மையாக நம்பி ஜீவர்கட்கு உதவிசெய்ய வேண்டியது அவசியம். ஜீவகாருணிய முள்ளவர்கள், சீவர்களைப் பசி யென்கிற ஆபத்தினின்றும் நீங்கச் செய்கிற உத்தமர்கள், எந்தச் சாதியாராயினும், எந்தச் சமயத்தவராயினும், எந்தச் செய்கை யுடையவராயினும், தேவர், முனிவர், யோகர் முதலிய

யாவராலும் வணங்கத்தக்கவர்களாவர் என்பதை நிச்சயமாய் அறியும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். எல்லாம் வல்ல பரம்பொருள் அருள் புரிவதாக.

ஓர் சகோதரி.

---

## " திருநீறு "

"நீறில்லா நெற்றி பாழ்."—ஔவை.

திரு=அழகிய, நீறு=சங்காரப் பொருள் அல்லது சாம்பல். இவ்வகைய திருநீற்றைப் பல்லாயிரக் கணக்கான சைவசமயிகள் தரிக்கின்றனர். அவர்களைப் போய் "திருநீறு" என்றால் என்னவென்று வினவினால், அவர்கள் "இது தெரியாதாக்கும் மாட்டுச் சாணியைச் சுட்டு எடுத்தால் விபூதி" என்கின்றனர். ஆனால் அது எங்ஙனம் உண்டாயிற்று? அதன் வகை யென்ன? பெருமை யென்ன? சக்தி யாது? அதன் பயன் யாது? என்ற கேள்விகளைக் கேட்டால் சிலரே தெளிவாய் உண்மை கூறுவர். ஆனால் இங்கு நாம் நமது நண்பர்களுக்காக நமக்குத் தெரிந்தவரையில் எடுத்துக் கூறத் துணிந்தோம். "ஆனந்தன்" இடந் தருவான் என்று கருதுகிறோம்.

ஏற்பட்டவிதம்.

### " கடம்பவனப் புராணம் "

" சான்ற நூல்புகல் சர்வசங் காரகா லத்திற்
றோன்றும் யாவுந்தன் னுதல்விழி யங்கியாற் றொலைத்து
மான்ற வார்குழை பாகனம் மயானத்து நடித்தா
னூன்ற நீறெலாந் தோய்ந்திட மேனியி லவற்றை"

" திருக்க ரத்தினால் வழித்தெறிந் தனன்றிகழ் விடைமுன்
விருப்பி னுலவை யயின்றந்த விடைதன்வீ ரியத்தை
யருப்ப மீக்கொளப் பசுக்கள்பால் விட்டதப் பசுக்கள்
பெருக்கு கோமயம் விபூதிக்கு விசேடம்பெ சினவால் "

அதாவது சங்கார காலத்திலே சிவபெருமான் தமது நெற்றிக்கண் நெருப்பினால் சகல பொருளையும் சாம்பலாக்கி அச்சாம்பலைத் தமது திருமேனியிலிட்டு, பின் மகத்துள்ள யாவற்றையும் தோற்றுவித்து, தம் திருக்கரத்தால் திருமேனியிலுள்ள சாம்பலாகிய விபூதியை வழித்தெறிந்தார். அது தன் ரிஷபத்தின்மேல் விழ அது மகிழ்ச்சியோடதை யுண்டு தன் வீரியத்தைப் பசுக்களிடம் விட்டது. ஆகையால் அப்பசுக்களின் கோமயம் திருநீற்றுக்கு மூலமாகிச் சிறந்து விளங்கிற்று.

நீற்றின் பெயர்கள்: பூதி, பசிதம், சாரம், காப்பு, நீறு என்று பற்பலவாம். பூதி—ஐசுவரியத்தைத் தருவது. பசிதம்—சிவத்துவத்தை விளக்கிக் காட்டுவது. சாரம்—உயிர்களின் மலத்தைக் கழுவுவது [அதாவது ஆன்மாவைச் சுத்தம் செய்வது.] காப்பு—பேய் பிசாசு, பிணி முதலியவைகளையும் அதன்

மூலமாய் வரும் துன்பங்களையும் நீக்குவது. நீறு—பாவங்களை தகிப்பது. இங்ஙனம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருள் உளது.

இதன் வகை : இது "வைதிகம், லௌகிகம்" என இருவகைப்படும். வைதிக நீறு இருவகைப்படும் (1) "புராதனி," (2) "சத்தியோசாதை."

புராதனி—பிரம்மன்யாக குண்டத்தில் உண்டாகும் விபூதியின் பெயர்.

சத்தியோசாதை—அந்தணர்கள் யாககுண்டத்தில் உண்டாவதன் பெயர்.

லௌகிக நீறு : சைவம் அசைவமென இருவகைப்படும். சைவநீறு—சிவதீக்கை யுடையவர்கள் தரித்துக்கொள்வது. அசைவ நீறு—தீக்கையற்றவர்கள் அணிந்துகொள்வது.

"பேரூர்ப் புராணம்"

"இலௌகிக பூதி தானு மிருதிற னாகும் பாவ
மூலவற வாற்றுந் தீக்கை யுற்றவர்க் குரிய தாக
நிலைபெற நிறுவுஞ் சைவ நீறென்றுந் தீக்கை யின்றி
யலைவுறு மாந்தர் தங்கட் கடுத்திடு மசைவ மென்றும்."

சைவநீறு மூவகைப்படும் (நால்வகையு முண்டாம்) (1) கற்பம் (2) அநுகற்பம் (3) உபகற்பகம் (4) அகற்பம் என்பனவாம்.

கற்பம் :— "பேரூர்ப் புராணம்."

"கன்றுபய வாதகளி நாகுபுனிற் றுக்கோ
கன்றிறுதி யுற்றகபி லைக்குலம லட்டான்
கன்றுதுணை யீன்றகர வைத்திரண் முதிர்ந்த
கன்றறு பசுக்கரு வயிற்றுவளர் பெற்றம்"

"வார்ந்தசெவி கோடுநெடு வாலிவைக டம்மிற்
றீர்ந்தசுர பித்தொகுதி தீதுவளர் பவ்வீ
யார்ந்துவரு காலிபிணி யான்றகுடஞ் சுட்டென்
றோர்ந்தவிவை நீங்கவெழி லோங்கிவளர் கற்றன்."

என்ற குற்றங் குறைகளில்லாமல் நல்ல பங்குனி மாதத்தில், அட்டமி, சதுர்த்தி, பௌர்ணமி யன்றையதினத்தில், வயலில் நெல்லந்தாள் மேய்ந்துவரும் பசுக்களின் சாணத்தை சத்தியோசாத மந்திரமோதித் தாமரையிலையில் ஏற்றி வாமமந்திரமோதிக் கௌவியம் வார்த்து, அகோரமந்திரமோதிப் பிசைந்து, தற்புருட மந்திரமோதி யுருட்டி, ஓமத் தீ யெனும் சிவாக்னியிலிட்டுச்சுட்டு ஆறியபின் ஈசான மந்திரமோதி யெடுத்துப் புது வஸ்திரத்தில் வடிக்கட்டி புதுப் பாண்டத்தில் போட்டுச் சுத்தமான இடத்தில் வைத்துக் காயத்திரி மந்திரம் ஜெபித்து முல்லை, மல்லி, முதலிய வாசனைப் புஷ்பங்களால் அர்ச்சித்து ஒரு புதிய வஸ்திரத்தில் எடுத்துக் கட்டிவைக்கவேண்டும்.

அநுகற்பம்:—வனம், பசு மந்தை முதலியவைகளில் தானே விழுந்து உலர்ந்து கிடக்கும் சாணத்தைச் சித்திரை மாதத்தில் எடுத்து முன்போல் சிவாக்னியிலிட் டெடுத்து வைத்துக்கொள்வதாம்.

உபகற்பம்:—காட்டுத் தீயால் இயல்பாய் வனத்தில் வெந்து கிடக்கும் சாம்பலைப் பஞ்ச கௌவியம் விட்டு எடுத்துவந்து பிசைந்துருட்டி முன் போல் சிவாக்னியிலிட்டு விளைவித்து எடுத்து வைத்துக்கொள்வதாம்.

அகற்பம்:—சிவதீக்ஷை யற்றவர்க்கு யாதேனுமோர் வழிமுறையாற் செய்யப்படாது தானே வெந்து கிடந்திருப்பதாம்.

அசைவநீறு:—இது இருவகைப்படும். (1) சிவாலயம் சிவனடியார் மடைப்பள்ளிகளில் வெந்து கிடக்கும் சாம்பல். சிவதீக்ஷ யில்லாதவர்க்கு இது உரியது. (2) சங்கர ஜாதியார்க்கு இது உரியது=காடுகளில் தானே வெந்து கிடக்கும் சாம்பல்.

"பேரூர்ப் புராணம்."

"தீக்கை புரியாச் சூத்திரர்க்குச் சிறப்ப தாகு மடைப்பள்ளி
யாக்கும் பொடிகான் வெந்தபொடி யடுப்ப தாகுஞ் சங்கரர்க்கு."

நிறபேதவகை :—கருநிறம் - பிணிதரும், செந்நிறம் - கீர்த்தியைப் போக்கும், புகைநிறம் - வாழ்நாளைக் குறைக்கும், பொன்னிறம் - சம்பத்தை நீக்கும், வெண்ணிற விபூதி - சொல்லொணுப் புண்ணியத்தையும், சித்த சுத்தியையும், மோக்ஷத்தையும் கொடுக்கும்.

"பேரூர்ப் புராணம்."

"அளவாப் பிணியைத் தருநீல மாயு ணிக்குந் தாமிரஞ்சீர்
பிளவா விசையைத் தருஞ் செம்மை பீதமளிக்கு நல்குரவே"

"வெண்மை யளவில் புண்ணியத்தை விளக்கு மதனு—"
—எது தரிக்கும் வண்மை யுடையது.

தரிக்கும் வகை இரண்டு விதம். உத்தூளனம், திரிபுண்டரம்,

உத்தூளனம் :—கிழக்கல்லது வடக்கு முகமாக விருந்துகொண்டு விபூதியைக் கீழே சிந்தாமல் வலக் கரத்தில் வைத்துக்கொண்டு, நீர் விட்டுக் குழையாமல், சிவ சிவ சிவ என ஜெபித்துக்கொண்டு நடு மூன்று விரல் களால் (விரல்களை நீக்காமல்) நெற்றி முதலிய தானங்களில் (அழகு நோக் காமல்) தரித்துக்கொள்ளல்.

திரிபுண்டரம் :—சரீர சுத்தி செய்துகொண்டு சுத்தமான விடத்தி விருந்துகொண்டு சிவத்தியானத்துடன் விபூதியை வலக் கரத்தாலேந்தி இடக் கரத்தில் வைத்து சுத்திசெய்து சம்ஹிதா மந்திரத்தால் அபி மந்தி ரித்து நீரிற் குழைத்து நடு மூன்று விரலினுலும் சிரஸ், நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள், மணிக்கட்டுகள், விலாப்பக்கம், முதுகு, காதுகள்,

கண்டம் ஆகிய விடங்களிலும், (நெற்றியில் புருவங்களின் கடைவரையிலும் மார்பிலும் புயங்களிலும் தனியாக ஆறு அங்குல நீளமும், கண்டத்தில் அதன் சுற்றளவு முழுவதும், மற்றைய விடங்களில் ஒவ்வோரங்குலமும்) நன்ருய் உத்தூளனமாகத் தரித்துக்கொண்டு, பிறகு திரிபுண்டாரம் (மூன்று கீற்ருக) தரிக்கவேண்டும்.

தரிக்கும்பொழுது, சிரித்துக்கொண்டாவது, நடந்துகொண்டாவது, பேசிக்கொண்டாவது, அசுத்தமான இடத்தில் நின்றுகொண்டாவது சண் டாளர்களுக்கு எதிரேயாவது தரிக்கக்கூடாது.

சூர்யோத யஸ்தமன காலத்திலும், * ஈர்யசௌசம் பண்ணி ஆசமித்த பின்னும், ஸ்நானம் செய்தவுடனும், அசுத்த மிருகங்கள் தீண்டின காலத் தும் அவசியம் விபூதி தரித்துக்கொள்ளல் வேண்டும்.

குருவாவது, சிவனடியாராவது அல்லது தம்மிற் பெரியோராவது விபூதி கொடுத்தால், அவர்களைச் சுற்றிவந்து மும்முறை நமஸ்கரித்து இரு கரத்தாலும் அதைப் பெற்றுக்கொண்டு தரித்துக்கொள்ளல் வேண்டும். இவர்கள் முன்னும், சுவாமி, சிவாக்னி முன்னும் விபூதி பெற்றுக்கொண் டால் அவ்விடத்தை விட்டுச் சற்று பின்னிடைந்து முகத்தைச் சற்று திருப் பிக்கொண்டு தரித்தல் அவசியம். தம்மினும் மேம்பட்டவர் சிவப்ரசாதமாகிய விபூதியைக் கொண்டுவந்தால் நாம் அன்புடனும், பயபத்தியுடனும் அவர் களைப் பன்முறை நமஸ்கரித்துப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். சிவதீக்ஷை யுடையவர் முக்காலத்திலும், மற்றையர் மத்தியானத்திற்குமுன் குழைத் தும் மற்ற காலங்களில் குழையாமலும் தரித்துக்கொள்ளல் வேண்டும்.

பயனும் பெருமையும்: வைதிக நீறு இகபோகத்தை மட்டும் கொடுக் கும். சைவநீறு, மாசகற்றி, மயக்கங்களை நீக்கி, சிவத்துவத்தை விளக்கி இக போகத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கும். இதனை:

"தணிகைப் புராணம்."

"முத்தியே யன்றிப் புத்தியும் வெஃகின் முகிழ்க்குமாற்
சைவவான் பூதி"

"திருமந்திரம்."

"கங்காளன் † பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வாரே யாமாகிற்
றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே" எனக் காண்க.

* மலஜல விசர்ச்சனம்.

† என்பு மாலை யணிந்த சிவபிரான்

பெருமை :—மெய்ப்பொருணாயனார் தம் முயிர் விடுங்கால் தம்மவரை நோக்கி, "பரவிய திருநீற்றன்பு பாதுகாத் துய்ப்பீர்" எனக் கூறி யருளியதும் இத்திருநீற்றின் மகிமையே. கூன் பாண்டியனுடைய கூனையும், சுரத்தையும் நீக்கியதும் இத்திருநீற்றின் பெறற்கரிய மகிமையே.

இனி "வேதத்திலுள்ளது நீறு" மந்திரமாவது, தந்திரமாவது, துதிக்கப்படுவது, தக்கோர் புகழ்வது, எண்டிசைப்பட்ட பொருளார் வத்துந் தகையது, பரவ இனியது, உண்மையிலுள்ளது, சத்தியமாவது, அருத்தமதாவது, தத்துவமாவது, சுந்தரமாவது, காணவினியது, பூசவினியது, புண்ணியமாவது, முனிவரணிவது, வானவர் மேலது, இராவணன் மேலது, வருத்தந் தணிப்பது, உடம்பிடர் தீர்ப்பது, அவலமறுப்பது, பத்திதருவது, இருமைக்குமுள்ளது, வானமளிப்பது, முத்தி தருவதானது இத்திருநீறு என்று ஸ்ரீ ஞானசம்பந்த ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்து கூறவில்லையா? ஏன்? அதன் மகிமையே. சங்கரதோஷம், பயந்துவிடல், ராக்ஷஸ் பிடித்தல், மந்திரித்தல் முதலியவைகளுக்கும் இதை உபயோகப் படுத்துகிறார்கள். (நாம் அதற்கு "காப்பு" எனப் பெயரென்று கூறியுள்ளோம்.)

"ஸ்ரீ கச்சியப்ப சுவாமிகள்."

"பகைபிணி மண்ணை பன்மந் திரத்தின
மிகையறன் கடையுளா வருட்சி பித்திடர்
வகையனைத் தையுமற மாற்றி யாவர்க்குந்
தகைநல மளிப்பது தவள நீறரோ"

"அலகை பூதம் வேதாள மடர்மந் திரத்தா னலைப்புறுத்தும்
பலதெய் வதங்க ளிடரச்சம் பழிபா வங்கண் மடமென்னுஞ்
சலதி முழுது மெளிதகற்றிக் காப்புக் கொளலாற் காப்புமா
நிலவைப் பிடத்தி னதன்பெருமை நிகழ்த்த வரிதா மடமாதே."

சக்தி :—வைத்ய சாஸ்திரப்படி, விஷச் சத்துக்களை நீக்கி விஷக்கிருமிகளைப் போக்கி, ரோகங்களை விலக்கி மனிதனைக் காக்கின்றது. அவரைச் செடிகளில் புழுபூச்சி முதலியவைகள் அணுகாமல் சாம்பல் போடுகிறார்கள். நீர்ப்பிணியைத் தீர்க்கின்றது. துவரை முதலியவைகளில் புழு பூச்சி விழாமல் சாம்பலை மேலே தூவுகிறார்கள். நமது சகோதரிகளுக்கு இவைகள் நன்றாய்த் தெரியுமென்று கருதுகிறேன்.

பிறமதஸ்தர் அணிதல் :—புறமதத்தினரும் (தம் மதப்படி எத்தகைய கொள்கைகொண்டோர்) இதைப் போற்றுகின்றனர். மகம்மதிய சகோதரர்கள் தங்கள் பள்ளிவாசலில் சர்க்கரை கொண்டுவந்து பாத்திஹா செய்கிறவர்கட்கு குருக்கள் "காறுஷா" என்னும் விபூதியைத் தருகின்றனர். அவர்கள் அதை நெற்றியி லிட்டுக்கொண்டு வாயில் போட்டுக் கொள்ளுகின்றனர்.

இன்றைக்கும் எல்லாப்பள்ளிவாசல்களிலும் இது நடைபெறுகின்றது. கிறிஸ்தவ சகோதரர்களும் விபூதித் திருவிழா என்று ஒரு காலத்தை யேற்படுத்திக் கொண்டாடுகின்றனர். அது புதவாரம் (ஆஷ் வெட்னஸ்டே என்ற) நடைபெறுகிறது.

"ஆனந்தன்" சகோதர சகோதரி சந்தா நண்பர்களே! நமக்கு யாராவது விபூதி கொடுத்தால் "என்னன்று ஏதோ துண்ணூத்தைக் கொடுத்தான் ரெண்டு இட்டுண்டேன்" என்று அலக்ஷியஞ்செய்து சும்மா விருக்க வேண்டாம். நாம் அதை பயபக்தியுடன் பெற்றுக்கொண்டு நாம் சொன்னபடி பெரியோராயின் தக்க மரியாதையோடு பெற்றுக்கொண்டு சிறியோராயின் ஒரு ஆசனத்தில் அதை வைக்கச்சொல்லி, சரீர சுத்தம் செய்து கொண்டு அதைப் புஷ்பங்களால் அர்ச்சித்து பயபக்தியுடன்பெற்று இட்டுக் கொண்டால் சத்தியமாக அதனால் நற்பயன் பெறுவோம்.

கடவுள் நமக்கும், "ஆனந்தனுக்கும்" பூரண அருள் புரிவாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

பா. பஞ்சாபகேசன்,
13, கச்சேரிரோட், மாயவரம்.

---

## பிரகலாதன்.

(386-ம் பக்கத் தொடர்ச்சி)

### சச்சிதாநந்த நீதி ஸ்தலம்.

நீதியதிபர், அகண்ட பரிபூரணர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டது. துந்துபி௵ சித்திரை௴ 30௳ 1922௵ வியாஜ்ஜிய நெ. 1-ல் இரணியன் - வாதி————(1) பிரகலாதன், (2) நரசிம்மன், 2-பிரதிவாதிகள்.

### நீதியும் முடிவும்.

1. பிராதின் சுருக்கம்;—பிரதிவாதிகள் வாதியை மோசமாகக் கொன்றுவிட்டதாகவும், இக்காரணத்தால் வாதி தான் ஆண்ட இராஜ்ஜியத்தையும் பட்டத்தையும், இழக்க நேரிட்டதென்றும், வாதியைப் பிரதிவாதிகள் அழிக்காதிருந்தால், இன்றைக்கும் நிராக்ஷேபனையாய் மூவுலகையும் ஆண்டுகொண் டிருப்பாரென்றும், ஆகையால் வாதி ஆண்ட மூவுலகமும், அவர் பெற்ற பட்டங்களும், அவர் இரணியனா யிருக்கும்போது பெற்றிருந்த சரீரமும் வரவேணுமென்றும் வாதியால் இந்தப் பிராது கொடுக்கப்பட்டது.

2. பிரதிவாதிகள் விவரப் பத்திரிகை:—வாதி கொடுங்கோன் மன்னனென்றும், தன் குடிகளைக் கொடுமையாய் நடத்தினரென்றும், அக்கிரம அரசாங்கத்தை 2-ம் பிரதிவாதிக்கு அழிக்க அதிகார முண்டென்றும், 1-ம் பிரதிவாதி அனுவசியமாய்க் கக்ஷிக்காரனாகச் சேர்க்கப்பட் டிருக்கிறாரென்

றும், வாதியின் தாவா காலாவதியாகி விட்டதென்றும், வாதி கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்க தில்லை யென்றும் பிரதிவாதிகளின் எதிர் வாதம்.

3 நிருபணங்கள்:—(1) வாதி லோகேஸ்வரனா? வாதி ஆண்ட ராஜ்ஜியங்களும் பட்டங்களும் கிடைக்க வேண்டியவைதானா? (2) வாதியின் தாவா காலாவதியாகி விட்டதா? (3) வாதி ஜீவர்களைக் கொடுமையாய் நடத்தியதுண்டா? (4) வாதியைத் தண்டிக்க 2-ம் பிரதிவாதிக்கு அதிகாரமுண்டா? (5) வாதிக்கு எம்மாத்திரப் பரிகாரம் கிடைக்கவேண்டியது?

4. வாதி கோரமான தவங்கள் செய்த பலத்தால் பிரம்மா அநேக வரங்களைக் கொடுத்தார். வாதி வரங்கள் பெற்ற கெர்வத்தினால் திரிலோகங்களையும் தன் சுவாதீனம் செய்துகொண்டு, இந்திரன், ஆதித்தன், வாயு, அக்னி, வருணன், சந்திரன், யமன் முதலானோருக்கு ஏற்பட்ட தொழில்களை வாதியே நடத்திக்கொண்டு, வருங் காலத்தில் தேவர்களெல்லாம் வாதியின் இம்சை சகியாதவர்களாய் பூலோகத்தில் மாறு வேடத்தோடு வசித்து வந்தார்கள்.

வாதிக்கு நியாய வழியில் மூவுலக அரசாக்ஷி கிடைக்கவில்லை; அக்கிரமமாகவே கைப்பற்றி யிருக்கிறார். மூவுலகிற்கு அரசனான கெர்வத்தால் தன்னைத் தவிர வேறு கடவுள் ஏது? என்ற கேள்வி அவரிடத்திலே உதயமாயிற்று. தன்னைத் தவிர வேறு ஈசுவரன் இந்த மூன்று உலகிற்கும் இல்லையெனத் தீர்மானித்தவராய், பஞ்ச மகா பாதகங்களை முதன்மையாய்க் கைகொண்டு அரசாக்ஷி செய்து வருங்காலத்தில் 1—ம் பிரதிவாதி என்ற தன் மகனை நோக்கி, 1-ம் பிரதிவாதியை ஆசாரியனிடத்தில் கற்ற பாடல்களைச் சொல்லக்கேட்டார். "படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலையுடையவரும் சகல சிருஷ்டியாதிகளிலும் அந்தராத்மாவாய் எங்கும் ஏகமாய் நிறைவுற்று விளங்குபவருமாகிய ஸ்ரீமந் நாராயணனுக்கு தண்டன் சமர்ப்பிக்கிறேன்" என்று 1-ம் பிரதிவாதி சொன்னார். இதனைக்கேட்ட வாதி கோபாவேசனாய், லோகேஸ்வரனாய் நானிருக்கப் பரமேஸ்வர னென்கிறவர் வேறொருவருண்டோ? என் முன் அன்னியனைத் துதிசெய்யாதே என்று சொல்ல 1-ம் பிரதிவாதி, விஷ்ணுவாகிய 2-ம் பிரதிவாதி எனக்கொருவனுக்கன்று, உமக்கும் சகலமான ஜனங்களுக்கும் ரக்ஷகரா யிருக்கிறார்; அவர் உன்னிலுமிருக்கிறார் என்னிலு மிருக்கிறார் என்று சொன்னார். வாதி அவரைப் பலவிதத் தொந்தரவுகளால் கொன்றுவிட முயற்சித்திருக்கிறார். 2-ம் பிரதிவாதியின் உதவியில்லாவிட்டால் வாதியின் கொடும் இம்சையால் 1-ம் பிரதிவாதி மாண்டே யிருப்பார்.

மேலே கண்ட காரணங்களால் வாதி தானே லோகேஸ்வரா பட்டத்தை ஏற்படுத்திக்கொண் டிருக்கிறார். தானே ஏற்படுத்திக்கொண்ட பட்டத்தையும், அக்கிரம வழியில் சம்பாதித்த அரசாங்கத்தையும் நியாயஸ்தல மூலம் பரிகாரம் கேட்பது விந்தையானது. ஒருவன் தன் புஜபல பராக்கிரமத்தால்

ஒரு தேசத்தைக் கைப்பற்றி அரசாக்ஷி செய்யலாம். அவன் ராக்ஷதம்ஸை யுடையவனு யிருந்ததால் 2-ம் பிரதிவாதி ருட்சிசெய்து அவனே அழித்து வேறு அரசாங்கத்தை நிலை நிறுத்தினர். அக்கிரமஸ்தர்களை ஒழிக்கவும் வன் நெஞ்சர்களை அழிக்கவும் 2-ம் பிரதிவாதி தச அவதாரம் எடுத்திருக் கிருர். காரணமில்லாமல் ஒரு வஸ்துவை அவர் ஒழிக்கமாட்டார்.

ஒருவன் தன் சரீரத்தின்மீது மிகு பற்று வைத்தவனுய் இப்பூவுலகிலே நீண்ட காலம் வசிக்க ஆசை கொண்டால், 2-ம் பிரதிவாதியின் அன்பிற்குப் பாத்திரனுகவேண்டும். தங்கள் சரீரம் அழிக்கப்பட்டபின் பழைய சரீரத் திற்கு ஆசைப்படுவது வீண் ஆசையாகும். ஆகையால் வாதி கேட்கும் பரி காரங்கள் செல்லத்தக்கதில்லை.

வாதி, 2-ம் பிரதிவாதி சிருட்டித்துக் காத்து அழித்தலைப்பற்றி மிகு பரிதாபப்பட்டுப் பேசுகிருர். இது அஞ்ஞான திசையிலிருக்கும்போது துக்கத்தையும், ஞானதிசையி லிருக்கும்போது சந்தோஷத்தையும் கொடுக் கும். வாதியின் அறியாமையால் பிறப்பு இறப்பைப்பற்றி வருத்தப் படு கிருர். இறப்பும் பிறப்பும் உலக சகஜம். உலகிற்கு இன்றியமையாதது.

வாதி இந்தப் பிராதை அனுவசியமாய்க் கொண்டுவந் திருக்கிருர். இந்நீதிச் சபையில் நீதி யளிக்கக் கூலி வாங்கப்படுவதில்லை யாதலால், உபய வாதிகளுக்கும் செலவு நேர்ந்ததென்று பிரஸ்தாபிக்கக் காரணமில்லை. ஆயினும் வாதி 2-ம் பிரதிவாதிக்கு வீண் சிரமமளித்ததற்காக அவரிடம் மன்னுப்புக் கேட்டுக்கொள்ள வேண்டுமெனத் தீர்ப்பளிக்கிறேம்.

நாளது துந்துபிஞு சித்திரைமீ 30உ நம்முடைய கையெழுத்தும். நியாயஸ்தல முத்திரையும் போடப்பட்டது.

அகண்ட பரிபூரணர்|
நீதியதிபர்.''

எஸ். அயோத்திராம், திண்டுக்கல்,

---

## மாதர் நெறிகள்.

(304-ம் பக்கத் தொடர்ச்சி.)

22. முன்னேர் ஆசாரம்.—சகோதரிகளே! இக்காலத்தில் நமது ஆடவரில் பலர் நம் முன்னேர் ஆசாரங்களை யலட்சியம் செய்வதோடு தாங் கள் நம் முன்னேரினும் அறிவில் சிறந்தவர்களெனக் கருதுகிருர்கள். இவர் கள் அன்னிய பாஷைக் கல்வி கற்ற கோணல் வழியும், அன்னிய நாகரீக மயக்கமுமே இதற்குக் காரணம். நம் முன்னேர்கள் ஸ்திரீகள் விஷயமாக ஏற்படுத்தியிருக்கும் ஆசாரங்களனைத்தும் உங்களுடைய இம்மை நலத்தோடு மறுமை நலத்தை விசேஷமாகக் கருதியே யேற்படுத்தப்பட்டவை. அதனுற் ருன் உங்கள் முன்னேர்களில் பலர் கற்பரசிகளென உலகத்தால் என்றும் போற்றப்படுவதோடு பத்தினித் தெய்வங்களாகவும் துதிக்கப்படும் அழியாப்

புகழ்பெற்று விளங்குகிறார்கள். ஆகையால் சகோதரிகளே! முன்னோர் ஆசாரங்களை யலட்சியமாகக் கருதி நவீன நாகரீக மயக்கில் சிக்கி இடருறா வண்ணம் எச்சரிக்கையா யிருங்கள். முக்கியமாக உங்கள் பெண்மக்கள் இப் புதிய நாகரீகத்தைப் பின்பற்றும்படி விடாதீர்கள். அந்தோ நமது உத்தம மதாசாரத்திற்குக் காவலாளிகளாகப் புகழப்படும் நீங்களே நமது பெண் களுக்கு அந்நிய ஆசாரங்களைக் கற்பிப்பது உங்களுக்குப் பெரும் பாதகத்தை யுண்டாக்கும். (தொடரும்.)

சீடன்.

---

## பெண்மக்கள் வேட்கை.

ஒழுக்கம் பற்றி மனிதர்கள் வகுத்துக்கொண்ட பிரிவுகள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், என நால்வகையேயன்றி, கடவுளால் பகுக்கப் பட்ட பிரிவுகள் ஆண் பெண் என இரண்டாகும். அவற்றுள், ஆண் மக்க ளின் தேகம் வெயிலிற் சென்று உழைத்துப் பொருளீட்டுவதற் கேற்றவாறு அமைக்கப்பட் டிருக்கின்றது. பெண் மக்களின் தேகமோ அவ்வாறின்றி நிழலிலேயே யிருந்து குடும்ப காரியங்களைக் கவனிக்கும் வண்ணம் மிக மென்மையுடையதாக அமைக்கப்பெற்றிருக்கிறது. அபலைகள், வஞ்சியர், மெல்லியர், என அவர்கட்கு வழங்கப்பெறும் பெயர்களும் அவர்களின் தேக நிலையைக் குறித்தே யென்ப.

இது காலப் பெண்மணிகள், கற்பரசிகளாய் நம் நாட்டியற்படி குடும்ப காரியங்களைக் கவனித்தல் பெருமை யன்றென்றும், மேல் நாட்டாரைப் போல் வெளியிற் சென்று பிற ஆடவருடன் உலவவும், பர புருஷர்களுடன் கை குலுக்கவும், பொது மன்றங்களில் அங்கம் பெறவும் விழைகின்றனர். அது நமது நாட்டிற்குத் தீமை பயக்கத் தக்கதென்பதே எமது கோட்பாடு.

எங்ஙனமெனின், அருந்ததி, அநசூயா, சீதா, தமயந்தி, நளாயினி, சாவித்திரி முதலாய கற்பரசிகளின் வழி வந்தவர்களாய நம் பெண்மணிகள், மேல்நாட்டுப் பெண்மக்கள்போல வெளிக்கிளம்பல், பிற ஆடவரோடாடல் இவை தீமைபயக்காவா?

வில் வேடனை எரித்தல், இரவி எழாமற் செய்தல், இயமனிடமிருந்து தனது கணவனுயிரை மீட்டல் ஆகிய அரிய செயல்களைப் புரிந்த கற்பரசி கள் போல் மேல்நாட்டில் மருந்துக்காவது ஒருவர் இருந்தாரெனக் கட்டுக் கதையேனுங் கூறக் கேட்டதுண்டா?

மேல் நாட்டுப் பெண்கள் சுவதந்தரம் பெற்ற காரணத்தால் அங்கு நடக்கும் வரம்பற்ற செயல்கள் செப்புந்தரத்தனவோ? புருடனுக் கடங்காப் பூவையர் பலர் நியாயமன்றங்களிலேறி வழக்கிட்டு, கொண்ட கணவனை விட்டு வேறு கணவனை மணந்து தமதிஷ்டம்போல் இன்பம் நுகர்தல் பலரும் நன்கறிவர்.

தன் புருடன் நீராடுவதில்லை யென வொரு பெண்ணும், தனது சகோதரியை இழித்துரைத்தனனென வோரிளங் கொடியும், தனக்கு தலைநோயுண்டாகும் வண்ணம் புகை யருந்துகின்றனனென வொரு தையலும், தன் கணவன் தனது கால் நகங்களை வாங்காமலிருக்கின்றன னென வொரு காரிகையுமாகப் பலர் பல அற்ப காரணங்களைக்காட்டி வழக்காடி ஜயம் பெறுகின்றனர். அந்நகர் நியாயமன்றக் கணக்குப்படி 1889 ஷுத்தில் 522 வழக்குகளும், 1890 ஷுத்தில் 541 வழக்குகளும், 1891 ஷுத்தில் 526 வழக்குகளும், 1892 ஷுத்தில் 536 வழக்குகளும் பெண்களுக்குச் சாதகமாகத் தீர்ப்புச் செய்யப் பெற்றதாக அறிகிறோம்.

இத்தகைய செயல்கள் கற்புடைய உத்தமிகளின் செயலாகுமா? அன்றியும் தமது தீயவொழுக்கங்களை மறைக்கும் பொருட்டுப் பெற்ற குழந்தையைப் பெட்டியில் மூடி உயிர் பிரித்த பெண்கள் எத்துணைபேர், கழுத்தை முறித்துக் கடைப்புறமெறிந்த கன்னிய ரெத்துணை பேர், தொட்டி நீரினில் அணிவுடனமுத்திய தோகைய ரெத்துணை பேர், மேல் நிலை மாடத்திருந்து கீழெறியும் மெல்லியரெத்துணை பேர், இத்துணைத் தீச்செயல்களை இந்தியர் குழுவிற் புகவிடுதல் நலமோ?

அறம் வளர்க்கும் அன்னையரே! சற்புத்திரரைப் பெறும் சகோதரிகளே! கற்புநிலை பிறழாத தெய்வீகவழி வந்த காரிகைகளே! ஆங்கில பாஷா பண்டிதர் பலரும் வெறுக்கத் தக்கவாறு பிற புருஷர்களுடன் வார்த்தையாடுதல் கை குலுக்குதல் முதலிவைகளை அறவே ஒழியுங்கள். உங்கள் நாயகர்களுக்கு அரிய விஷயங்கள் ஞாபகப்படுத்துங்கள், உங்கள் சிறுவர்களை வீர சிங்கங்களாகவும், ஞானப்பொக்கிஷங்களாகவும் விளங்கும்படி பழக்குங்கள். அப்பொழுதுதான் நீங்கள் நம் நாட்டின் வழி வந்தவர்களாகக் காணப்படுவீர்கள். மேல் நாட்டார் போல் நடந்து கற்புடைய மாதரசிகளிருந்த பரிசுத்த இந்திய நாட்டை அசுத்தப்படுத்தி விடாதீர்கள். உலகைக் கற்பின் மகிமையால் பெருமையுற நடத்திய சுவதந்தர தெய்வங்களாகிய நீங்கள் சுதந்தரம்வேண்டுமெனப் பிறர்பால் வேண்டுவது இழிதகையன்றோ!

கற்புடைய உத்தமிகளாகிய உங்களின் பெருங் கருணையாலன்றோ இந்நாடு ஞானபூமியாக விளங்குகிறது; நீங்களிரா விடில் நாயகர்கள் விரதங்களை ஒழுங்கு பெற அனுஷ்டித்தலும் அருமையன்றோ? அத்தகைய பெருமையை என்றும் நிறை வேற்றுங்கள்! நீங்கள் கனம் பெறுவீர்கள்! உலகமும் சுகம் பெறும்!

தி. வடிவேலு முதலியார்,
தமிழ்ப் பண்டிதர், போர்டு ஹைஸ்கூல், திருக்கோவிலூர்.
(இந்தியத்தாய்.)

## சந்தாநேயர்களுக்கு ஓர் அறிக்கை.

அடுத்த ஆடிமீ 8-ம் ஆண்டு பிறக்கிறது. இதுகாறும் அனுப்பியது போல் ஆடிமாத சஞ்சிகையை-வி பி விலனுப்புவதற்குப் பதிலாக 7-ம்வருட

12-ம் மாதமாகிய ஆனிமீ சஞ்சிகையையே வி. பி யிலனுப்பி 8-ம் வருட சந்தாவை வசூலிக்கத் தீர்மானித் திருக்கிறோம். முன்பண மனுப்பாமல் வி. பி யில் சஞ்சிகை பெறுவதால் 3 அணா அதிகச் செலவும் வீண் ஆலசியம் முதலியவைகளும் நேர்வது யாவருமறிந்ததே.

ஆதலின் மேமீ 30உக்குள் சந்தாத்தொகை நம்மிடம் சேரும்படியனுப்புவோர்க்கே உருத்ரோத்காரிஞு பஞ்சாங்கம் இனாமாக அனுப்பப்படும். மேமீ 30உக்குள் பணமனுப்பாதவர்களுக் கெல்லாம் ஆனிமீ சஞ்சிகை வி. பி. யிலனுப்பப்படும்.

☞ 8-வது வருடம் சஞ்சிகை வேண்டாதார் மேமீ 31உக்குள் தெரிவித்து விட்டால் அவர்களுக்கெல்லாம் ஆனிமீ சஞ்சிகை சாதாரணமாக அனுப்பிவிடப்படும்.

சஞ்சிகையை நிறுத்தும்படி வரைவோரும், மணியார்டர் அனுப்புவோரும் சந்தா நம்பரைத் தெரிவிக்காவிட்டால் பின்னால் வி. பி. வரும். ஆகையால் ஒவ்வொரு சந்தாதாரும் தயவுசெய்து இம்மாதம் வரும் சஞ்சிகையின் மேல்விலாசத்தைப் பார்த்தாவது நம்பரை யவசியம் தெரிவிக்கும்படி பிரார்த்திக்கிறோம்.

பத்திரிகாசிரியர்.

---

## மாணவர்களுக்குச் சில போதனைகள்.

(302-ம் பக்கத் தொடர்ச்சி)

20. குற்றம்:—நண்பர்களே! குற்றம் செய்வது மனிதர் அனைவர்க்கும் இயற்கையே. அறிவாளிக ளனைவரும் தம்மாலான வரையில் குற்றமான காரியத்தைச் செய்யாம லிருக்கவே முயலுவார்கள். ஆயினும் அறிந்தோ அறியாமலோ குற்றத்தைச் செய்துவிடல் யாவர்க்கும் இயற்கையே.

ஆனால் சிலர் தாம்செய்த குற்றத்தை இன்னொருவர் மேல் சுமத்திவிடுகிறார்கள். சிலர் குற்றம்செய்ததை மறுத்து விடுகிறார்கள். சிலர் ஒரு காரியத்தை யன்னியர் செய்தால் குற்றம் என்கிறார்கள். ஆனால் அதேகாரியத்தைத் தாங்கள் செய்தபோது அது குற்றமல்ல வென்று வாதிக்கிறார்கள். ஒருவன் தான்செய்த குற்றத்தை மறுப்பது கோழைத்தனமாகும்; அதை மறைக்கப் பொய் கூறுதல் மூடன் செயலாகும்; அதை யின்னொருவன்மேல் சுமத்தல் அக்கிரமமும் பாவமுமான செயலாகும். தான் செய்த குற்றத்தை யொப்புக்கொள்பவனே பெருந் தன்மையுடைய உத்தமனாகும். தான் செய்யுங் காரியமாயினும் குற்றமானதைக் குற்றமென்றே கூறுகிறவனே மேலோனாவான். அத்தகையோனே அன்னியர்க்குப் போதிக்க வல்லவன். அத்தகையோனிடம் பாரபட்சமாவது 'அநீதியாவது இராது.

எப்போதும் தாம் செய்த குற்றத்தை யொப்புக் கொள்வதிலேயே சிறுவர்கள் பழகவேண்டும். அத்தகையோர் பிற்காலத்தில் பொய்பேசாத சத்தியவான்களாகப் பிரகாசிப்பார்க ளென்பது நிச்சயம்.

21. முன்யோசனை.—ஒரு காரியத்தைச் செய்ய உத்தேசிக்கும்போது, அப்படிச்செய்தால் அதனால் நமக்குப் பின்னால் நன்மையுண்டாகுமா தீமை யுண்டாகுமா என்று தீர்க்காலோசனை செய்வதற்கே முன்யோசனை என்று பெயர். அனேகருக்கு இக்குணம் குறைவே. அதிலும் வாலிபரிடம் அதி மிக அரிது. பெரும்பாலான சிறுவர்கள் பெற்றோர்க்கும் உபாத்தியாயருக் கும் பயந்து, விதியில்லை யென்று பாடசாலைக்குச் செல்கிறார்களே யன்றி, கல்வியின் பயனையறிந்து கட்டாயம் நாம் கல்வி கற்கவேண்டுமென்ற ஊக் கத்தோடு கற்பவர் மிகச் சிலரே. மாணவர்கள் சிறுவயதி லிருந்தே எதையும் யோசித்து ஆராய்ச்சி செய்யப் பழகுவது, பிற்காலத்தில் உலக விஷயங்களில் ஈடுபடும் போது அவர்களுக்கு மிக்க பயனையளிக்கும்.

22. முந்தோரையிகழ்தல்.—அனேகம் வாலிபர்களிடத்தில் இப்பழக்கம் இருக்கிறது. அதாவது வயது முதிர்ந்தவர்களாயின் அவர்கள் பேச்சையே யலட்சியமாகக் கருதல். அதிலும் ஆங்கிலங்கற்கும் மாணவர்கள் ஆங்கிலங் கல்லாத ஒருவன், அவன் எவ்வளவு வயது முதிர்ந்தவனாகவும், தாய்ப் பாஷையில் எவ்வளவு உயர்ந்த கல்வியும் முதிர்ந்த உலக அனுபவமும் உடையவனாகவும் இருப்பினும், அவனை மிக்க அலட்சியமாகவே மதிக்கிறார் கள். சிறுவயதிலிருந்தே நம் நாட்டு முதியோரைப் பற்றியும், பழைமையான ஆசாரங்கள் ஒழுக்கங்களைப் பற்றியும் மிக்க தாழ்வானமதிப்பு இவர்கள் மன தில் உண்டாய் விடுகிறது.

இவர்களுக்குக் கல்வி கற்பிக்கப்படும் போதனா முறையே யிதற்குக் காரணம். இவர்கள் வாசிக்கும் புத்தகங்களில் "நம் நாடு பூர்வீகத்தில் மிக்க அநாகரீகமும், தரித்திரமும், அநீதியும், மடமையும், மலிந்த நாடாக விருந் தது. இப்போது தான் நாம் நாகரீகம் பெற்று செல்வமோங்கி உன்னத நிலைமைக்கு வந்துகொண் டிருக்கிறோம். நமக்குமுன் இருந்த சந்ததியார் சுத்த அநாகரீக மூடர்கள், மூடக் கொள்கையை யுடைத்தாயிருந்தவர்கள்" என்பது முதலான அபிப்பிராயங்களை யிவர்கள் மனதில் உண்டாக்கக் கூடிய படிப்பினைகளே யடங்கி யிருக்கின்றன. அதோடு அவற்றில் கூறப் படுவன யாவும் இவர்கள் இதுகாறும் காணாதனவும், இனியும் காணக்கூடா தனவுமாகிய தேசங்கள், பொருள்கள், ஆசார ஒழுக்கங்கள் முதலியவற்றைப் பற்றியனவே. நமது நாட்டின் பூர்வ நிலைமை, பெருமை, முன்னோர்களின் அரிய குணங்கள், பூர்வ நாகரீகம் முதலியவைகளைப்பற்றி இவர்கள் வாசிக் கும் புத்தகங்களில் பெரும்பாலும் கூறப்படுவதில்லை. அதாவது இப்புத் தகங்கள் அன்னிய மதம் அன்னிய ஆசாரங்களையுடைய மேல்நாட்டு மாண வர்களுக்கென்று எழுதப்பட்டவைகளே யாகும்.

அந்தோ வெள்ளைச்சடிதம்போல் ஒரு விஷயமும் பதியப்பெறாமல் களங்க மற்றிருக்கும் சிறுவர் மனதில் முதலில் எழுதப்படும் இந்த அபிப்பிராயங்கள்

நன்றாய்ப் பதிந்து விடுகின்றன. "நாம் வாசிப்பது உண்மைக்கு முற்றும் மாறானது அல்லது அனேகம் உண்மைகள் இவற்றில் மறைக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலை எழுதியவர்கள் தங்கள் சுயநலங்கருதியே வெள்ளையைக் கறுப்பென்று நாம் கருதும் வண்ணம் செய்கிறார்கள்" என்று இப்பாலியருக்கு அறியும் ஆற்றல் இல்லை. நம் நாட்டு அறிவாளிகளாகிய முதியோரே சமீபகாலம் வரையில் இத்தகைய வற்றை யுணராது மயங்கியிருந்தாரென்றால், பாலியர்கள் எங்ஙனம் அறிவார்கள்?

மாணவ சகோதரர்களே! உண்மையறிந்து மயக்கமொழிந்து தெளிவு பிறந்திருக்கும் இக்காலத்திலேனும் உங்களிடமுள்ள கெட்ட அபிப்பிராயத்தை யடியோடு விட்டொழியுங்கள். ஆங்கிலங்கற்றதனாலேயே நாம் மூத்தோரினும் நம் முன்னோரினும் அறிவிலும் நாகரீகத்திலும் மேம்பாடுடையோம் என்று சிலர் கருதுவதை விடப் பெருந்தவறு வேறொன்று மில்லை.

நண்பர்களே! ஆங்கிலக்கல்வி, கொஞ்சநாட்களில் அழிவதும், பிறவிப் பெரும்பிணியை வளர்ப்பது மாகிய இவ் வுலகபோகத்தைப் பெறுவதற்கு மட்டுமே வழிகாட்டியாயுள்ளது. அந்தோ ஹிந்துக்களாகிய நமக்கு என்று மழியாத மறுமை யின்பமே அவசியமானது. நம் முன்னோர் கல்வி முறைப்படி சிறுவயதில், ஆரம்பத்திலிருந்தே, ஆன்மார்த்தத்தைப் பற்றி போதிக்கும் கல்வி சிறுகச் சிறுக ஊட்டப்பட்டு வந்தது. ஆகையால் எதிலும் மேற்பூச்சான பளபளப்பால் பிரமையடைந்து விடாதீர்கள். கண்மூடித்தனமாய் வீண் பிரமையடைந்து எல்லாவற்றிலும் அன்னியரைப் பின்பற்றி விடாதீர்கள். காலம் இடம் இவற்றின் பேதத்தால் ஒருவர்க்கு அமிர்தமாயிருப்பது மற்றொருவர்க்கு விஷமாக ஆய்விடும். விஷந்தின்றவன் அதற்கு முறிப்பாகிய வேறொரு விஷத்தை யருந்தினால் பிழைக்கிறான். அதை யறியாமல் இன்னொருவன் அதே முறிப்பு விஷத்தை யருந்தினால் மரித்துப் போவான். ஆகையால் கண் மூடித்தனமாக அன்னியரை எல்லா விஷயங்களிலும் பின்பற்றல் முடிவில் பெருந் தீங்கையே விளைவிக்கும் என்பது உண்மை. தங்கள் தேசாசார வொழுக்கங்களைக் கைவிடும் எந்த ஜாதியாரும், தேசத்தாரும், அன்னியரால் அவமதிக்கப்படுவதோடு ஒரு போதும் மேலோங்கி வரமாட்டார்கள்.

சகோதரர்களே! இவையாவும் மனதில்வைத்து நம் முன்னோர் விஷயங்களை யவமதிக்காதீர்கள். அவர்கள் ஆழ்ந்த அறிவோடும் பிரத்தியட்ச அனுபவத்தின் பேரிலுமே ஒவ்வொரு ஏற்பாட்டையும் செய்திருக்கிறார்கள். யாவும் நம் இருமைப்பயன்களையும் கருதியே செய்யப்பட்டன. மூத்தோர் வார்த்தைகள் உலகஅனுபவத்தோடு பொருந்தியவை யாதலின் அவற்றைப் பொன்னேபோல் போற்றுங்கள். அது பற்றியே "மூத்தோர்சொல் வார்த்தை யமிர்தம்" என்று கூறப்பட்டது. (தொடரும்.)

சீடன்.

# இல்லறம்—ஜீவகதி.

(392-வது பக்கத் தொடர்ச்சி)

அன்றியும் ஆதி சிருஷ்டியில் பிதிர்த்தேவர்கள் பிரமதேவரால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இது முன்னமே கூறப்பட்டது. இவர்களையே தென்புலத்தாரென்று திருவள்ளுவர் கூறியிருக்கின்றார். இந்தத் தேவர்களே இந்தக் கிரியைகளுக்குரிய அதிதேவதைகள். நாம் முன்கூறியவாறு நமது திவசதர்ப்பணாதிக் கிரியைகளில் விடப்படும் நீர் முதலியவற்றை அவற்றிற்குரிய பிதிர்க்களுடன் சேர்த்துவிடுவார்கள். முன்பு அது கூடுவது இயற்கையாமென்று கூறினோமாயினும் பிதிர்த்தேவர்களும் காரணமாயிருக்கின்றார்கள். பிதிர்க்கர்மங்கள் எல்லாவற்றிற்கும் இவர்களே பிரதான தேவர்கள். பிதா, பிதாமகன், பிரபிதாமகன் (மூன்றாம் பாட்டன்) மாதா, பிதாமகி, பிரபிதாமகி இவர்களாகப் பாவித்து, நாம் கொடுக்கும் பதார்த்தங்களையும் தட்சிணைகளையும் ஏற்றுக்கொள்வதற்காக ஆவாகனம் செய்யப்படுகிறார்கள். இவர்களை அழைப்பதற்காகத் திவசதிதிக்கு மூன்று நாட்கள் முன்பாகவே கர்த்தா விரதம் அனுஷ்டிக்கவேண்டும். அம்மூன்று நாட்களிலும் அவன் பிரமதியானத்திலிருக்கவேண்டும். பிரமதியானத்தாலும் விரதத்தினாலும் நிர்மலமாயிருக்கும் இதயதாமரையில் பிதிர்த்தேவர்கள் ஆவிர்ப்பவிப்பார்கள். அப்போது அந்தத் தேவர்களைப் போஜனம் செய்பவர்கள் முதலியவர்கள் பேரில் ஆவாகனம் செய்கிறார்கள். பிதிர்த்தேவர் அவர்களிடத்தில் பிரத்தியட்சமாய் நின்று நாம் கொடுப்பனவற்றை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் ஏற்றுக்கொண்டவைகளை நமது பிதிர்க்கள் எந்த இடத்திலிருந்தாலும் அவ்வவ்விடங்களிற் சேர்ப்பித்து விடுவார்கள். இவ்வாறு இயற்கையாலும் தெய்வ சகாயத்தாலும் நமது பிதிர்க்களைக் குறித்து நாம் செய்கிற புண்ணியங்களும் தான தர்ம பலன்களும் அவர்களிடம் சேர்ந்துவிடுகின்றன. இவ்வாறு கர்மங்களைச் சிரத்தையோடு செய்கிறவனைப் பிதிர்த்தேவர்கள் ஆசீர்வதிக்கின்றார்கள். இதனால் கர்மத்தைச் சிரத்தையாகச் செய்கிறவனும், அவனுடைய புத்திரன் பேரனாகிய இவர்களும் பாவனமாகிறார்கள். இவர்களோடு முன் கூறிய பிதா பிதாமகன் பிர பிதாமகன் இவர்களைக் கூட்டி எழுதலைமுறை என்று கூறப்படும். அதாவது கர்மஞ் செய்கிறவனுக்கு முன் மூவர், பின் மூவர், கர்த்தாவாகிய அவன், இவ்வெழுவர்களு மாசீர்வதிக்கப் படுகின்றார்கள்.

சொர்க்கத்தில் உள்ளவர்கள் தாம் பூலோகத்திற் செய்த புண்ணியத்தின் பயனாகிய சுகமொன்றையே அனுபவித்துக்கொண் டிருப்பார்கள். நரகலோகத்திலுள்ளவர்கள் பாபபலனாகிய துக்கத்தையே அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். அவ்விடங்களில் (பாப புண்ணிய)[*] கர்மங்கள் ஒன்றுஞ் செய்யப்படுவதில்லை. பூலோகத்தில் செய்ததின் பலனையே அனுபவிக்கவேண்டும். அப்படி அனுபவித்துக்கொண் டிருக்கும்போது பூலோ

கத்தில் அவர்களைக் குறித்துச் செய்யப்படுகிற புண்ணிய பலன் அவர்களை யடையும். அடைதலால் சொர்க்கத்திலுள்ளவர்கள் இன்னம் சிறிதுகாலம் அவ்வுலக போகங்களை அனுபவிப்பார்கள். நரகத்திலுள்ளவர்களுக்கு மிக வும் உபகாரமாயிருக்கும். ஏனெனில் அவர்கள் பாபபலனை அனுபவிக்கிற போது இந்தப் புண்ணிய பலன் ஏறும். புண்ணியம் ஏறவே பாபபலன் குறையும். அதனால் அந்த ஆத்மாக்கள் சீக்கிரத்தில் நரகத்தை விட்டு நீங்கும். நரகத்தினின்றும் நமது பிதிர்க்களை விடுவிப்பதற்காகவும், புண்ணிய வுலகங்களில் வசிப்பவருடைய புண்ணிய பலனை விருத்தியாக்குவதற்காக வுமே சிராத்தாதி பிதிர்க்கர்மங்கள் செய்யப்படுகின்றன. சிரத்தையுடன் செய்யப்படுவதால்தான் திவசத்திற்குச் சிராத்தமென்று பெயரிடப்பட் டது. இந்தக் கிரியையினால் நரகத்தில் வருந்துகிறவர்களும் அதினின்றும் தப் பித்துக் கொள்ளும் மார்க்கமறியாதவர்களுமாகிய முன் மூன்று தலைமுறை யாரைக் காப்பாற்றுகிறதாக இதனாலுண்டாகும் புண்ணியம் அளவற்ற தாம். எந்தக் கர்மத்தை விட்டவனானாலும் பிதிர்க் கர்மத்தைப் பக்தி சிரத் தையுடன் செய்வானானால் புண்ணிய லோகத்தையடைவான்.

இவ்விஷயத்தில் மனு—"வேதங்களை யோதித்தத்துவஞான முணர்ந்த வனே பிதிர்க்கிருத்தியத்தில் போஜனத்துக்கு முக்கியமாக வரிக்கத்தக்க வன். அல்லது வேதங்களை அங்கங்களுடன் ஓதினவன் அருகனாவான்; அல்லது வேதம்மாத்திர மோதினவன். இவர்களைத் தவிர மற்றவர்கள் சிராத்த போஜனத்தில் வரிக்கத்தக்கவர்களல்லர். சிராத்தத்துக்கு இரண்டு நாள் அல்லது ஒரு நாளாவது முன்னதாகவே முற்குறித்த சற்பாத்திரர் களைச் சிராத்த போஜனத்துக்காக வரிக்கவேண்டும். இப்படியுபசரித்து வரிக்கப்பட்டவனும் கர்த்தாவும் அதுமுதல் சந்தியா வந்தனந்தவிர வேறொரு ஜபம் செய்யாமலும் வேதாத்தியானஞ் செய்யாமலும் சம்போகாதி களில்லாமலும் ஜிதேந்திரியர்களாய்ப் பிரமதியானத்தி லிருக்கவேண்டும். ஏனென்றால் விதிப்படி பூஜித்து வரிக்கப்பட்டவனிடத்தில் அப்போதே பிதிர்த்தேவர்கள் வாயுரூபமாகப் பிரவேசிக்கிறார்கள். ஆதலால் வரிக்கப் பட்ட அக்கால முதல் அவன் விரதானுஷ்டானம் செய்யவேண்டும். வேத மோதினவனிடத்தில் சகல தேவர்களும் வசிக்கிறார்களாதலால் அவன் பரி சுத்தமானவன். அவனிடத்தில் பிதிர்த்தேவதைகள் உடனே பிரசன்ன ராகிறார்கள்."

இங்ஙனங் கூறப்பட்டவன், ஐந்தாம் வயதில் உபநயனஞ் செய்யப்பெற் றுப், பிரமசரிய விரதமுடையவனாய்க் குருகுலவாசம் செய்து, ஜிதேந்திரி யாய்க் குருபணிவிடை செய்து சதா வேதசிந்தனையி லிருப்பவனாதலால் அவனிடத்தில் சகல தேவர்களும் வசிப்பார்கள் என்றார். அன்றியும், "அநாதி தேவர்களான பிதிர்க்கள் சின மில்லாதவர்களாயும், உள்ளும் புறமும் பரி சுத்தர்களாயும், எப்போதும் பிரம்ம விசாரஞ் செய்பவர்களாயும், சண்டை

யில்லாதவர்களாயும், மஹானுபாவர்களாயும், கருணையுள்ளவர்களாயுமிருக்கிறார்கள். ஆதலால் கர்த்தாவும், போக்தாவும் (புசிக்கிறவனும்) விரதானுஷ்டானம் செய்யவேண்டும்.'' இப்படிச் சிரத்தையுடன் சிராத்தம் செய்தால் பிதிர்த்தேவர்கள் திருப்தி யடைவார்கள். நமது பிதிர்க்களும் நற்கதி பெறுவார்கள். கர்த்தாவும் சந்ததி, செல்வம், ஆயுசு, ஆரோக்கியம் முதலிய பெற்று நீடித்து வாழ்வான்.

இவ்வாறு சிராத்தம் செய்வதால் கர்த்தாவடைவதெவ்வாறென்னில், கிருதக்ஞை (நன்றியறிதல்) என்னும் பெரும் புண்ணியத்தைப் பெறுகிறான். நன்றி என்பது உபகாரம். "நன்றி மறப்பது நன்றன்று'' என்று தேவர் கூறினர். அன்றியும்

"எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு
எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு''

என்று கூறி, நன்றி செய்தவரை யெழுபிறப்பிலும் மறக்கக் கூடாதென்றும், மறந்தானானால் அந்தப் பாபத்துக்கு வேறு பிராயச்சித்தமில்லை யென்றுங் கூறினர். இதனால் நன்றியறிவு பெரும் புண்ணியமாமென்றும், மறத்தல் மஹாபாவமாம் என்றும் புலப்படும். தாய் தந்தையர்களைப்போல உபகாரம் செய்தவர் வேறெவருமில்லை. இம்மை மறுமைப் பயன்களையும் மோட்சத்தையு மடைவதற்குச் சரீரமே காரணம். மனித சரீரம் மற்றெல்லா சரீரங்களையும் விட மேலானது. அவ்விதமான சரீரோற்பத்திக்குக் காரணர்களாயிருந்து புத்திரர்களைப்பெற்று, அவர்களுக்கு ஒரு கெடுதியும் வாராமல் காப்பாற்றி, உலக அறிவையும் உலகங்கடந்த தெய்வபக்தியையும் புகட்டி வளர்த்த உபகாரத்திற்குக் கைம்மாறு யாதொன்றுமில்லை. அவர்கள் சரீர போஷணாதி உபகாரங்களைச் செய்யாவிட்டால் இம்மை மறுமைப்பயன்களை யொருவன் அடைவதில்லை. யாவற்றுக்கும் காரணமான சரீரோற்பத்திக்குக் காரணர்களான மாதா பிதாக்களாகிய உபகாரிகள் எல்லாரையும்விட மேலானவர்களென்பதில் தடையில்லை. ஜனன முதல் மோட்சபரியந்தம் நினைக்கத்தக்க பேருபகாரத்தைச் செய்த மாதா பிதாக்களை நரகதுன்பத்தினின்றும் விடுவிப்பதற்கும், சொர்க்காதிபுவன போகங்களை விருத்தியாக்கி அவர்களை மகிழ்விப்பதற்கும் இந்தக் கிரியை எவ்வளவு சிறப்புடையது! நன்றியறிதலாகிய இவ்வுபகாரத்தினால் பெறப்படும் புண்ணியமும் மஹாபெரிதேயாம். சிராத்தமென்கிற இந்தக்கன்மம் எல்லாவற்றிலும் பெரிது. இதை விட்டவன் ஆரியகுலத்தானாகமாட்டான். நம்முன்னோர்களா லேற்படுத்தப்பட்ட இது இந்தக் கலிகாலத்திலும் விடாமற் செய்யப்பட்டு வருகின்றது. நிற்க,

சொர்க்காதி போகங்களை யனுபவித் தொழிந்ததும்; நரகத்திலிருந்து விடுபட்டதுமான ஆன்மா அதோகதி மார்க்கத்தையடைந்து பிதிர்லோக மாகிய சந்திர மண்டலத்தையடையும். அவ்விடத்தில் பரிபாகப்பட்டிருக் கிற சரீரோற்பத்தி காரணவனுக்களைக் கிரகித்துக்கொண்டு சிலகால மங் கிருக்கும். நன்ருய்ப் பரிபாகப்பட்ட பின் மீண்டும் பூமியை நோக்கி வரும். எவ்வாறு வரும் எனில் சந்திரனிடத்திலிருந்துண்டாகும் பனி யின் வழியாகப் பூமியிலிறங்கும். பூமியிலடங்கிக்கிடக்கும் செடி கொடி விருட்சங்களிற் பிரவேசிக்கும். பிரவேசித்த அந்த ஜீவனே வித்து சொருப மாகும். பாபசேஷமுள்ள ஆன்மா அப்பாவத்திற்கேற்ற ஈனசரீரத்தை யும், புண்ணிய சேஷமுள்ளவை அப்புண்ணியத்துக்கேற்ற உயர்ந்த சரீரத் தையும் பெறும். (இன்னும் வரும்)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

---

உ

# பகவத்கீதை வசனம்.

## விநாயகர் காப்பு.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
யிந்து விளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

ஐந்து திருக்கரங்களையும், யானை முகத்தையும், மூன்றும் பிறைச்சந் திரனை யொத்த பிரகாசம் பொருந்திய ஒற்றைக் கொம்பினையும் உடைய வரும், பரமசிவனது மூத்த குமாரரும், ஞானக்கொழுந்துபோல் பிரகாசிக் கும் திருமேனியை யுடையவருமாகிய விநாயகக்கடவுளது பாதகமலங்களை யடியேன் சித்தத்தில் வைத்துத் துதிக்கின்றேன்.

---

## பரம்பொருள் வணக்கம்.

உலகமுதற் பொருளையும்பர்க் குணர்வரிதாம் பொருளை
யோதியவே தாகமத்தி னுச்சியினுட் பொருளைப்
பலகலையின் பொருள்முடிவின் முடிவான பொருளைப்
பற்றறப்பற் றியபெரியோர் பரவியவான் பொருளை
யலைதிவலை நுரைகடலி னுதித்தொடுங்கு மாபோ
லகிலாண்ட முதித்தொடுங்கு மதன்மூலப் பொருளை
யிலகியசற் குருவாகி யாளும் பொருளை
யெங்குமாம் பரம்பொருளை யாமும்வணங் குதுமே.

இந்த அண்டாண்ட சராசரங்களுக்கெல்லாம் மூலகாரணமாயுள்ள வஸ்துவை, தேவர்களாலும் உணர்வதற்கரிதாகிய பொருளை, வேதாகமங்களின் முடிவாகிய கருத்தாயுள்ள பொருளை, எல்லா சாத்திரங்களின் கருத்துகளும் எப்பொருளில் போய் முடிகிறதோ அப்பொருளை, இகபரபோக ஆசையாவும்ஒழித்துப் பரம்பொருளே பற்றுகவுடைய மகான்கள் நேசிக்கும் மேலான பொருளை, அலை, திவலை, நுரை முதலியவை கடலிலே தோன்றிக் கடலையே யிடமாகக் கொண்டிருந்து, கடலிலேயே இலயமாவதுபோல், இந்த அகில அண்டங்கள் அனைத்தும் எந்த வஸ்துவினிடத்தில் தோன்றி, எந்த வஸ்துவினிடத்தில் நிலைத்திருந்து, எந்த வஸ்துவிலேயே இலயமாகிறதோ, யாவற்றிற்கும் மூலகாரணமாகிய அத்தகைய பொருளை, எந்தப் பொருள் தன்மை முன்னிலையாகிய ஆசாரியராகவும் நானாகவும் எல்லாமாகவும் விளங்கி யிருக்கின்றதோ, எங்கும் நிறைந்த அத்தகைய பரம் பொருளைத் திரிகரண சுத்தியோடு போற்றுவோமாக.

---

## தக்ஷிணாமூர்த்தி துதி.

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப் பாலா
யெல்லாமா யல்லதுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்து காட்டிச் [வாம்.
சொல்லாமற் சொன்னவரை நினையாம னினைந்துபவத் தொடக்கை வெல்

வேதாகமங்களனைத்தும் கற்றுணர்ந்து, முடிவான ஐக்கிய நிலையைப் பெறும் வழியைப் போதிக்க வேண்டுமென்று தவம்புரிந்த ஜனக ஜனாதிகளுக்காகக் கல்லால விருட்சத்தின்கீழ் குரு மூர்த்தமாக எழுந்தருளி, மனோவாக்குக் கெட்டாத அகண்ட பரிபூரணமான மௌன சாக்ஷாத்கார நிலையைச் சின்முத்திரைக் குறியால் சொல்லாமற் சொல்லி யருளிய தட்சணாமூர்த்தத்தை மனமற்ற நிலையில் நாடிப் பிறப் பிறப்பாகிய பவப்பிணியை யொழித்து நித்தியானந்த நிலையை யடைவாம்.

---

## நூல்.

## கண்ணன் துதி.

ஐவகைப் பொருளு நான்கு கரணமுங் குணங்கண் மூன்றுஞ்
செய்வினை யிரண்டு மொன்றி யாவருந் திகைப்ப நின்ற
பொய்யிரு ளகல ஞானப் பொருட்கதிர் விரித்த புத்தேள்
கைவள ராழிச் செங்கட் கண்ணனைக் கருத்துள் வைப்பாம்.

ஐந்து வகையாகிய பஞ்ச பூதங்களும், பிராணாதி பஞ்ச வாயுக்களும், கன்மேந்திரியம் ஐந்தும், ஞானேந்திரியம் ஐந்தும், அந்தக் கரணங்களும், சத்துவம், ரஜசு, தமசு என்ற முக்குணங்களும், புண்ணிய பாவங்களாகிய

வினைகளும், யாவும் தாமேயாகப் பொருந்தி (அஞ்ஞானிகள்) அனைவரும் பிரமிக்கும்படி நிற்கின்றவரும், பொய்யாகிய மாயாந்தகாரமானது ஒழியும் வண்ணம் ஞானார்த்தம் நிறைந்த கீதா சாத்திரமென்னும் கிரணங்களைப் பரப்பிய பரமாதித்தனுகியவரும், திருக்கரத்தில் ஏந்திய சக்கரத்தையும் சிவந்த கண்களையு முடையவருமாகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை இருதயத்தில் வைத்துத் துதிப்பாம்.

கீதை யெனின் பாட்டு என்று சாதாரணமான பொருள். பூர்வ சரித்திரத்தைக் கூறுவதற்கும் கீதை யென்று பெயர். ஈண்டு அப்பொருளே. கீதையில் பகவற்கீதை, ரிபுகீதை, பிரம்மகீதை, ஈசுரகீதை அல்லது சிவகீதை, உத்தரகீதை, அவதூதகீதை எனப் பலவகையுண்டு. யாரார் எதைதைக் கூறினர்களோ அவரவர்கள் நாமதேயமே அததற்கு வைக்கப்பட்டது. நாம் இங்கு கூறத்தொடங்குவது பகவற் கீதை. கிருஷ்ணபகவானுல் கூறப்பட்டதற்கு பகவற்கீதை யென்று பெயர். கீதைகளில் விசேடமாக உலகில் போற்றப்படுவது பகவற்கீதையே யாகும். இதற்குப் பாமார்த்த தரிசனம் என்றும் பெயர்.

இராமாயணத்தில் வாசிஷ்டம் எப்படி அதன் சிரோபூடணம்போல் விளங்குகிறதோ, அதுபோல் பாரதத்திற்கு இக்கீதை சிரோபூடணமா யிருக்கிறது. கிருஷ்ணபகவான் இக்கீதையைப் பாரத யுத்தாரம்பத்தில் அர்ச்சுனனுக்கு உபதேசித்ததாக வியாஸர் தாம் எழுதிய பாரதத்தில் கூறுகிறார். இது அர்ச்சுனனுக்குக் கூறப்பட்டதாக விருந்தாலும், உலகோர் அனைவர்க்கும் மேலான ஒப்பற்ற பிரம்ம ஞானத்தை யுதவக்கூடிய தென்பது வெளிப்படை.

சிலர், யுத்த ஆரம்பத்தில் யுத்த களத்தில் இவ்வளவு விஷயங்களைக் கிருஷ்ணர் எப்படிப் போதித்திருப்பார்? அதற்கு அவகாச மேது? என்று சங்கிக்கிறார்கள். இது கீதையின் பயனைத் பெறத்தக்க நல்வினைப் பயனில்லாக் குறையாலுண்டாகும் சந்தேக விபரீத புத்தியேயாகும். கையிற் கிடைத்தது ஜராம்மரணத்தைப் போக்கும் அமிர்தம் என்று தெரிந்தவரையில் அதை யருந்திப் பயன் பெறுவதைவிட்டு, "இது எப்படி இங்கு வந்தது? யார் கொண்டுவந்து வைத்தது?" என்பது முதலிய கேள்விகளைக் கேட்டுக் கொண்டு வீண்காலம் போக்குவது மதியீனமே யன்றோ. பகவான் அர்ச்சுனனுக்குக் கீதையை யெந்தச் சமயத்தில் போதித்ததாக விருப்பினும் இருக்கட்டும். அல்லது உலகோபகாரமாக வியாச பகவானே இப்பிரம்ம ஞான போதனையைப் பாரதத்திற் சேர்த்ததாக விருந்தாலு மிருக்கட்டும். அதைப் பற்றிக் கவையில்லை. எக்காரணத்தாலோ வெளிவந்த இவ்வரும் பொருளை யுணர்ந்து பயனடைய முயல்வதே நமது கடமையாகும்.

வேறு சிலர் "அர்ச்சுனன் தன் சுற்றத்தார் ஆசாரியர்கள் முதலியவர்களை யெல்லாம் கொன்றுவிட்டு அநித்தியமாகிய இப்பூமியை யாள்வதில்

யாது பயன்? நான் அடவிக்குச்சென்று தவம் புரிந்து நற்கதி பெறுவேன் என்று கூறியது நன்மார்க்கந்தானே. அப்படியிருக்கக் கிருஷ்ணர் அவனுக்கு எதைப் போதித்தாராயினும், கடைசியில் யுத்தம் செய்து யாவரையும் கொல்லும்படிதானே அவனைத் தூண்டினர்? அது அக்கிரமமான செய்கைதானே'' என்கிறார்கள்.

அர்ச்சுனன் உலகமுதல் பரபோகம் ஈறாக யாவும் அநித்தியம், சடம், துக்கம் என்று நித்தியா நித்திய வஸ்து விவேகம் ஜனித்து ஞானவைராக்யம் கொண்டு தவத்திற்குச் செல்ல முயலவில்லை. ஆனால் நான் என்பதும், இவர்கள் என் சுற்றத்தார் என்பதுமாகிய பிராந்தியில் அழுந்தி, சோக மோக வயத்தனாய்த் தன் க்ஷத்திரிய தருமத்திற்கு மாறாக நடக்கக் கருதினான். சோகமோகம் தமோகுணமாகிய அஞ்ஞானமேயாகும். ஆகையால் பகவான் அவனுக்கு ஆத்மஞான விளக்கமுண்டாகச் செய்து சோகமோகங்களை யொழித்து, அவன் தன் தருமத்தின்படி யொழுகும்படி செய்தார்.

இக்கதை கிருஷ்ணார்ச்சுன சம்வாதமாகப் பதினெட்டு அத்தியாயங்களில் கூறப்பட்டிருக்கிறது.

## 1-வது சோக அத்தியாயம்

பாண்டவர்கள் பனிரண்டு வருடங்கள் வனவாசமும் ஒருவருடம் விராடதேயத்தில் அக்கியாதவாசமும் கழித்த பின், தங்கள் தாயபாகத்தை யளிக்கும்படி துரியோதனனைக் கேட்டார்கள். துரியோதனன் ஊசி நாட்டுமிடமும் அவர்களுக்குக் கொடேனென்று மறுத்ததாலேயே பாரதப் போர் உண்டாயிற்று. 'சஞ்சயர்'* அன்றாடம் குரு க்ஷேத்திரத்தில் நடக்கும் சமாசாரத்தைக் கண்ணில்லா வரசனாகிய திருதராட்டிரனுக்குக் கூறிக் கொண்டிருந்தார்.

துரியோதனாதியரும் பாண்டவர்களும் தத்தமது சைனியங்களோடு புண்ணிய பூமியாகிய குருக்ஷேத்திரத்தில்† போய் சேர்ந்த பின், திருதராட்டிர மகாராஜன் சஞ்சயரை நோக்கிப் பின் வருமாறு வினவலுற்றான்:—

"ஓ சஞ்சயரே! புண்ணிய பூமியாகிய குரு க்ஷேத்திரத்தில் யுத்தம் செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு ஒருங்குகூடியிருக்கும் நமது புத்திரர்களும் பாண்டு மைந்தர்களும் என்ன செய்கிறார்கள்?'' என்றான்.

[தன் புத்திரர்களும் பாண்டவர்களும் யுத்தம் புரியவேண்டியே அங்கு சென்றிருக்கிறார்கள் என்பதை யுணர்ந்த திருதராட்டிரன் அவ்வாறு பொதுவாய்க் கேட்பானேன்? என்றால், அவனுக்கியற்கையாயுள்ள பாரபக்ஷ புத்தி

* 'சஞ்சயன்' என்றால் இராகத்துவேஷாதிகளை வென்றவன் என்று பொருள்.

† குரு க்ஷேத்திரம்=குரு பூமி.

யாலுண்டான சந்தேகமே அதற்குக் காரணம். என்னை யெனின், பாண்டவர்கள் தருமிஷ்டிகள் ஆதலால் யுத்த பூமியில் சென்ற பின் அந்தோ இத்தனை ஜீவர்களைக் கொன்றன்றோ நாம் ஜெயம் பெறவேண்டும் என்று சிந்தித்து ஜீவகாருண்ய மேலீட்டால் யுத்தம் புரியாமற் போய்விடுவார்களே யாகில் நமது புத்திரரே ஒரு கஷ்டமுமின்றி முழு இராஜ்ஜியத்தையும் அடைவார்கள்; அப்படிக்கின்றி அப்புண்ணிய பூமியின் தரிசன விசேடத்தால் நமது புத்திரராகிய துரியனுதியர் பாண்டவர்மேல் பச்சாத்தாபமடைந்து, முன்பு கபடமாகச் சூதாடி யபகரித்த இராச்சியத்தைப் பாண்டவர்களுக்கே கொடுத்து விடுவார்களாயின் யுத்தம் செய்யாமலே இராச்சியத்தின் ஓர் பாகத்தை யிழந்து விடுவார்களே, ஒரு சமயம் இத்தகைய விஷயம் ஏதேனும் நடைபெறுகிறதோ வென்ற மனக்கலக்கங் கொண்டே திருதராட்டிரன் அவ்வாறு 'என்ன செய்கிறார்கள்' என்று பொதுவாய் வினவினன்.

சஞ்சயர்:—கேளும் திருதராட்டிர மகாராஜனே! யுத்தத்தின் ஆரம்பத்தில் தமது புதல்வனும் அரவக்கொடியோனுமாகிய துரியோதனன் யுத்தத்திற்கு ஆயத்தமாக நிறுத்தப்பட்டிருக்கும் பாண்டவர்கள் சேனையைக்கண்டு துரோணாசாரியரை நெருங்கிப் பின்வருமாறு கூறினன்:—

"ஓ! துரோணசாரியரே! துருபதராஜ புத்திரனாகிய திருஷ்டத்யுமனன் என்பவனால் பலவித அணிகளாக வகுக்கப்பட்டதும், யுத்த சாமார்த்தியத்தில் பீமார்ச்சுனனுக்குச் சமானமானவர்களாய்க் கருதப்பட்ட விராடன், துருபதன், திருஷ்டகேது, சேகிதானன், குந்திபோஜன், முதலிய அரசர்களும் இன்னும் அபிமன்யு முதலிய மகாரதரான அநேக அரசர்களும் படைத்தலைவர்களாய் அமையப்பெற்றதுமான பாண்டவரது திரண்ட சேனையை நோக்குவீராக.

எனது சேனையில் மிக்க சுத்தவீரராகிய தாங்கள் இருக்கிறீர்கள். அவ்வாறே பீஷ்மபிதாமகர், எனது பிராணசிநேகனும் அங்கதேசாதிபதியுமாகிய கர்னன், அசுவத்தாமர், கிரிபாசாரியர், விகர்ணன், சல்யன், பகதத்தன் முதலிய அனேகம் சூரர்கள் எனக்கு ஜெயம் உண்டாக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு தங்கள் அருமையான பிராணன்களைத் தத்தம் செய்ய ஆயத்தமாக வந்திருக்கிறார்கள். மேலும் என்னுடைய சேனை பதினொரு அக்ரோணியிருக்கிறது. பாண்டவர் சேனையோ ஏழக்ரோணியே யிருக்கிறது. இனி அவரவர்கள் தத்தமது சேனைப் பகுதிகளை அதனதன் இடத்தில் நிறுத்திப் பிரியாமல் சாக்கிரதையோ டிருந்து சேனாதிபதியான பீஷ்மபிதாமகரை நாற் புறங்களிலும் காத்துக்கொள்ளுங்கள்" என்றான்.

(தொடரும்)

சீடன்

## கனவு.

கனவு அல்லது சொப்பனம் என்பது ஜீவர்கள் அஞ்ஞான தசையில் அனுபவிக்கும் சாக்கிரம் முதலிய அவஸ்தைகளில் ஒன்று. அது சாக்கிரத்திற்கும் சுழுத்திக்கும் இடையிலுள்ள நிலைமை. இந்த நிலைமையில் தசவாயுக்களும், ஞானேந்திரிய கன்மேந்திரியங்களும், ஐந்து வகையாகிய அந்தக் காரணமும் தொழில் செய்கின்றன.

கனவு எப்படி யுண்டாகின்றது?

சாக்கிரத்தில் நடப்பதுபோன்றே கனவில் தோன்றுகிறது. கனவு காணும்போது சாக்கிரம்போல் அது பிரத்யக்ஷமான உண்மை யென்றே தோன்றுகிறது. ஆயினும் சாக்கிரத்திற்கும், சொப்பனத்திற்கும் மிக்க வித்தியாசமுண்டு. கனவில் ஆன்மா சாக்ஷி மாத்திரமாய் நடக்கும் விவகாரங்களைக் காண்கிறதே யன்றி அதிகமான அறிவு விளக்கமில்லை. விவேகம் மங்கி யிருக்கிறது. அதனால் அசம்பாவிதமான விஷயங்களைக் கண்டாலும் அது ஒரு அதிசயமெனத் தோன்ருது. திருட்டாந்தமாக சாக்கிரத்தில் ஒரு நாய் வானத்தில் நடந்துசெல்லக் காண்போமேயாயின் எவ்வளவோ வியப்பும் பிரமையு மடைவோமன்ருே. அதே காட்சியைக் கனவிற் கண்டால் வியப்பே தோன்ருது. ஏனெனில் கனவில் பூர்வம் நடந்த விஷயங்களின் நினைவில்லை. அப்போது காண்பது மட்டில்தான் தெரியும். அதுவும் அப்போதுதான் தோன்றியதாகத் தெரியாது.

கனவில் சாக்கிரத்தில் நடந்த விவகாரங்களின் நினைப்புவரின் அப்போது காண்பது கனவென்ற ஞாபகம் வரும். அது வந்தவுடனே கனவு ஒழிந்து விழிப்பு வந்துவிடும். இறந்த காலத்தைப்போல் எதிர்கால சிந்தனையும் கனவில் இல்லை. கனவில் ரயிலில் ஏறிக்கொண்டு செல்வதுபோல் கண்டால், அப்படிச் செல்வதுமட்டும் தெரியுமன்றி இன்ன ஊருக்குப் போக வேண்டும் இன்ன காரியம் செய்யவேண்டும் என்பன முதலிய சிந்தனையிராது. ஆகவே கனவில் ஆன்மா சாட்சிமாத்திரமாய் இருந்து நடப்பவற்றைக் காண்கிறது. அதனுற்ருன் நாம் 'கனவு காண்கிறது,' 'கனவு கண்டேன்' என்று கூறுகிருேம்.

1. சிலர் கனவு காணும்போது ஆன்மா வெளியிற்சென்று, அங்குள்ள வஸ்துக்களைக் காண்கிறது என்று கருதுகிருர்கள். இது முற்றும் தவருன கொள்கை. ஆன்மா இந்திரியங்கள் கரணங்கள் முதலியவை யடங்கிய சூக்கும தேகத்தோடு சம்பந்தப்பட்டிருந்தால்தான் கனவு நிகழும். அப்படி சூக்கும தேகத்தோடு ஆன்மா ஸ்தூல தேகத்தைவிட்டு வெளிப்படுவதாயின் தேகம் சவமாகி விடவேண்டும். கனவு காணும்போது பிராணன் ஸ்தூல தேகத்தில் இயங்கிக்கொண் டிருப்பதால் சவமாக மாறவில்லை யென்பது பிரத்யக்ஷம்.

அதோடு, அப்படி ஆன்மா வெளியிற்சென்று அங்குள்ளவற்றைக் காண்பதாயின் கண்டவைகள், காலம் இடம் பொருள் யாவும், சத்தியமான

லவைகளாக விருக்கவேண்டும். அப்படி யில்லை. நடு இரவில் கனவு காண்பவன் மத்தியான சூரியனைக் காண்கிறான். மேலும் ஆன்மா தேகத்தை விட்டு வெளிப்போந்தால் மறுபடி அதே தேகத்திற்கு வந்து நுழைவதில்லை.

2. சிலர் சாக்கிரத்தில் கண்ட பதார்த்தங்களே கனவில் தோன்றுகின்றன வென்கிறார்கள். கனவிலோ எந்த வஸ்துவையும் நாம் முன்பு கண்டதாக உணர்ச்சியே யில்லை. ஒருவன் "நான் கனவில் புலியைக் கண்டேன்" என்கிறானேயன்றி "நான் நேற்று ஸர்கஸ் விளையாட்டில் கண்ட புலியைக் கனவில் கண்டேன்" என்று கூறுவதில்லை. மேலும் நான் சாக்கிரத்தில் கண்டவற்றையே கனவில் காண்கிறோமென்ற நியமமில்லை. என்றும் கண்டிராததையும், இயற்கையில் சம்பவிக்க முடியாததையுங்கூடக் கனவில்காண்கிறோம்.

பகவான் கீதையில் "உலகு கனவைப்போல் பொய். உலகத் தோற்றம் கனவுபோன்றதே. விழித்துக்கொண்டால் எப்படிக் கனவு பொய்யெனத் தோன்றுகிறதோ, அப்படியே ஞானமான விழிப்பு வந்தால் உலகமாகிய கனவும் பொய் எனத் தோன்றும்" என்றபோது அர்ச்சுனன்,

"பகவானே! சாக்கிரத்தில் பார்த்த பொருளையே கனவில் காண்கிறோம். கனவில் கண்ட பொருள் பொய்யாயினும் அத்தகைய உண்மையான பொருள் ஒன்று இருக்கிறதென்பது மெய்யேயன்றோ. அதுபோல் மெய்யாகவே இத்தகைய ஒரு உலகம் இருந்து, நாம் அதைப் பார்த்திருந்தால் தானே இப்போது கனவில் அதைப்போன்ற உலகைக் காண்கிறோம் என்று கூறலாம்?" என்றான்.

அதற்குப் பகவான் "சாக்கிரத்தில் காணாதவற்றையும் கனவில் காண்கிறோம். ஒருவன் கனவில் தான் ஆகாயத்தில் பறப்பதுபோல் காண்பதே அதற்குத் திருட்டாந்தம்" என்றார்.

இவ்வாற்றால் சொப்பனத்தில் ஆன்மா தேகத்தைவிட்டு வெளிச் செல்வதுமில்லை யென்பதும், சாக்கிரத்தில் கண்ட பொருளையேதான் சொப்பனத்தில் காண்கிறோம் அல்லது ஸ்மரிக்கிறோம் என்று கூறுவதற்கும் இடமில்லை யென்பதும் நன்கு விளங்குகிறது. பின்னை சொப்பனம் எப்படி யுண்டாகிறது ?

மனம் சதா விஷயாதிகளில் நுழைந்து உழன்றுகொண் டிருப்பதே சொப்பனத்திற்குக் காரணம். சாக்கிரத்தி லிருக்கும்போது நாமே மனோராஜ்ஜியம் செய்வதைப் பகற் கனவு என்கிறோம். நமக்குண்டாகும் சித்த விர்த்திகளனைத்து மனதினிடமே படிந்து கிடக்கின்றன. நமக்கு அவை மறக்கப்பட்டவைபோல் காணப்படினும், கிணற்றில் எறியப்பட்ட கற்கள் கண்ணுக்குப் புலப்படாவிடினும் கிணற்றின் அடியில் படிந்து கிடப்பது போல், விஷய வாசனைகளும் மனமாகிய கடலின்கீழ் படிந்து கிடக்கின்

றன. கனவில் அவை ஏகதேசமாகத் தாமே வெளிக் கிளம்புகின்றன. பூர்வ ஜன்ம வாசனையும் அவ்வாறே மனதின்கண் ணுண்டு. ஆனால் கனவில் இறந்தகால அனுபவ உணர்ச்சியில்லை யாதலாலும், புத்தி மங்கியிருப்பதாலும் நமக்கு யாவும் அப்போதுதான் காணப்படுவனபோல் தோன்றுகின்றன. கனவில் தோன்றும் விஷயங்களில் ஒரு ஒழுங்காவது, ஒன்றுக்கொன்று சம்பந்தமாவது, காரணகாரிய உணர்ச்சியாவது, வரம்பாவது கிடையாது. ஒருவன் சாக்கிரத்தில் செய்ய அருவருக்கும் காரியத்தைக் கனவில் சர்வ சாதாரணம்போல் செய்துவிடுவான்.

கனவில் தோன்றும் யாவும் நித்திரா மோகசம்பந்தமுடைய அவித்தையினால் உண்டாக்கப்பட்டவையே யாகும். அவை யாவும் பொய்யே. ஏனெனில் தக்க காலமும் சாமக்கிரியைகளுமின்றி க்ஷண நேரத்தில் தோன்றும் எந்த வஸ்துவும் சத்தியமானதாக விருக்கமுடியாது. மண்ணும், தண்டசக்கரமும், குலாலனு மிருந்து அவசியமான காலம் செலவழிந்தபின் ஒரு குடம் உற்பத்தியாயின், அது சத்தியமானதாக விருக்கும். அப்படிக்கின்றி ஒன்றுமில்லாத இடத்தில் திடீலென்று புலப்படும் ஒரு குடம் சத்தியமானதாக விருக்குமோ? இராது. அது திருஷ்டி தோஷத்தால் தோன்றி மறையும் பொருளாகுமே யன்றிச் சத்தியமானதாகாது.

கனவில் தோன்றும் கால அளவையும் பொய்யே. அதாவது ஒருவன் தான் சுமார் காலை எட்டு மணிக்கு வண்டியிலேறிப் புறப்பட்டு பனிரண்டு மணிக்கு ஒரு பட்டணத்திற்குள் பிரவேசிப்பதாகவும், அங்கு ஒரு புலி வரக்கண்டு ஓடுவதாகவும், ஐந்தாறு வீதிகள் ஓடுந்தனிலும் புலி துரத்தி வருவதாகவும், பிறகு ஒரு வீட்டிற்குள் ஒளிந்து கொண்டு நெடுநேரம் இருந்ததாகவும், தீபம் வைத்தபின் வெளிப்பட்டதாகவும் கனவு காண்கிறான். இக்கனவில் சுமார் ஒன்பது மணிநேரம் கழிந்ததாக அவனுக்குப் புலப்பட்டாலும் உண்மையில் அவன் கனவு கண்டது ஒரு விநாடியேயிருக்கும்.

இந்த விஷயம் அனுபவமாகக் கண்டறியப்பட்டது. ஒரு ஐரோப்பியர் ஒருநாள் இரவு போஜனம் செய்து விட்டு மேல் மாடியில் ஒரு அறையில் இருந்த சாளரத்தருகில் சாய்வு நாற்காலியில் சாய்ந்து சுருட்டுப் பிடித்துக் கொண்டே யிருந்தவர் உறங்கி விட்டார். அப்போது அவர் கீழ்க் கண்டபடி கனவு கண்டார்:—

அவர் ஒரு சிநேகர் வீட்டிலிருந்த ஒரு கன்னிகையைக் கண்டு அவள் மேல் காதல் கொண்டு சில தினங்கள் பழகியதன் பின், தன்னை மணம் புரியும்படி அவளைக் கேட்க, அவள் சம்மதித்தாள். ஒருநாள் இருவரும் தோட்டத்தில் உலவிக்கொண் டிருக்கையில், அவளை முன்பு காதலித்திருந்து அன்னிய நாடு போய் அன்று திரும்பிவந்த ஒருவன் இவர்களைக்கண்டு, இம் மனிதனைச் சண்டைக்கழைக்க இருவரும் கைத்துப்பாக்கிகளை யெடுத்துக்

கொண்டு ஒருவரைப் பார்த்து ஒருவர் சுடுகிறார்கள். தன் எதிரி தன்னைச் சுட்டதே டுமீல் என்ற சத்தம் கிளம்பியது. உடனே அச்சத்தம் இன்னும் செவியிலிருக்கும் போதே இம்மனிதன் விழித்துக் கொண்டு, சே கனவு கண்டோம் என்றுணர்ந்து பீதிதெளிந்து, கையிலிருந்த சுருட்டைப் பார்த்தான். அதிலிருந்த நெருப்பணையவில்லை. ஏனெனில் இவன் கனவு கண்ட காலம் முழுமையும் சேர்ந்து துப்பாக்கிச் சத்தம் இவன் செவிவழி நுழைந்து மனதில் தாக்க எவ்வளவு காலம் செல்லுமோ அவ்வளவு காலமே. அதாவது இரண்டொரு விநாடியே.

இம்மனிதன் கனவுகண்ட காரணம் என்னவெனில், இவன் வீட்டில் இவன் மைத்துனன் வந்திருந்தான். இவன் சாப்பிட்டுச் சுருட்டு பிடித்துக் கொண்டிருக்கையில் இவன் மைத்துனன் வீட்டைச் சூழ்ந்துள்ள தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தான். அச்சமயம் இவன் சுருட்டுப் பிடித்துக்கொண்டிருந்த அறையின் எதிரிலுள்ள பெரிய மரத்தில் ஒரு கோட்டான் குந்திச் சத்தமிட்டது. இவன் மைத்துனன் அதைச் சுட்டான். அத்துப்பாக்கிச் சத்தமே இவன் செவிப்புலன் வழி நுழைந்து மனதில் தாக்கி விழிப்பை யுண்டாக்கும்போது இக்கனவைத் தோற்றுவித்தது. இம்மாதிரி பல திருஷ்டாந்தங்களுண்டு.

கனவு பலிக்கிற துண்டென்றும் கூறுகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் அப்படிக் கனவில் கண்டது பிறகு உண்மையாகவே நடப்பதுண்டு. ஆனால் அது அவரவர் மனோநிலைமையைப் பொருந்தியது. மனதில் அபாரமான சக்தியிருக்கிறது. ஆனால் நாம் மனதை வயப்படுத்தி அச்சக்தியை யுணரவில்லை. அறிவாளிகள் பலர் அம்மனோவல்லமையை யுணர்ந்து தூரத்தில் நடக்கும் எதிர்கால நிகழ்கால விஷயங்களை யெல்லாம் உணர்கிறார்கள். நமக்கு அன்பார்ந்த ஒரு நண்பர் அல்லது சுற்றத்தார் இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் அவருக்கு ஒரு விசேஷ நன்மையோ தீமையோ நேரும்போது ம்னோவல்லமையால் அது நம் மனதிற்குப் புலப்படுவதுண்டு. அது நித்திரையிலும் நிகழும், சாக்கிரத்திலும் மனதில் திடீலென்று புலனாவதுண்டு. நித்திரையில் நிகழ்ந்தால் நாம் அதைக் கனவெனக் கருதிக்கொள்கிறோம். சாக்கிரத்தில் தோன்றின் நாமே எண்ணிக்கொண்டதாக நினைக்கிறோம். பிறகு நான் அப்படியே நினைத்தேன் என்கிறோம். ஆனால் மனதை வயப்படுத்த அப்பியாசம் செய்தவர்கள் அதனுண்மையை யுணர்வார்கள். ஒவ்வொரு சமயம் நாம் ஒருவரைப்பற்றிச் சிந்திக்காமலே யிருக்கையில் அவர்கள் இரயில்விட்டிறங்கி வருவதுபோல் அல்லது அவர்களிடமிருந்து கடிதம் வருவதுபோல் திடீலென்று மனதில் தோன்றுவதும், சற்று நேரத்திற்குள் அவ்வாறே நடப்பதும் உண்டு. இவையாவும் மனதின் அபாரமான வல்லமையால் ஒவ்வொரு சமயம் சேர்வதே யாகும்.

இவ்வாறே இருவர் மூவர் ஏககாலத்தில் ஒரே மாதிரிக் கனவு காண்பதுண்டு. அச்சமயம் கனவில் சம்பந்தப்பட்ட விஷயத்தின் சிந்தனை இவர்கள் அனைவரின் மனதிலும் பதிந்து இடப்பதாக விருக்கும். சில தெய்வீக காரணங்களாலும் கனவில் கண்டபடி நடப்பதுண்டு. இத்தகைய விஷயங்கள் நடப்பதாலேயே கனவு பொய்யல்ல வென்று கூறலாகாது.

யார் கனவே காண்பதில்லையோ அவர்கள் சுத்த மூடர்களாகவாவது, பைத்தியம் பிடித்தவர்களாகவாவது, கொலைபாதகர்களாகவாவது இருப்பார்கள் என்று ஒரு மேல்நாட்டு ஸாஸ்திரியார் கூறுவதாக ஒரு சஞ்சிகையிற் கண்டோம். இது சுத்தத் தவறான அபிப்பிராயமும் அனுபவத்திற்கு மாறானதுமானது. மனம் ஆன்மா முதலியவற்றைப்பற்றி நமது சாத்திரங்களில் கூறியுள்ள அவ்வளவு விவரம் மேல்நாட்டுச் சாத்திரங்களிலில்லை. சடசம்பந்தமாக எது வரையில் கூறக்கூடுமோ அவ்வளவு மட்டுமே மேல்நாட்டார் ஆராய்ச்சியில் அடங்கியது. அவர்களுடைய சித்தாந்தப்படி மனதிற் கப்பால் ஒன்றுமே கிடையாது. உண்மையில் மனதிற்கப்பாலுள்ள நிலையிலேயே ஆன்மாவின் அபாரமான சக்தி முழுமையும் வெளியாகிறது. நமது முன்னோர் அதை யனுபவமாக அறிந்து அனேக அரியகாரியங்களை யெல்லாம் செய்திருக்கிறார்கள். ஆன்ம சக்தியால் அவர்கள் செய்ய முடியாதது ஒன்றுமேயில்லை.

இப்போது கனவே காணமல் இருக்கமுடியுமா என்பதைப் பற்றியும் அப்படி யார் காணமலிருக்கக்கூடும் என்பதைப்பற்றியும் கூறுவாம். மனமிருக்கிற வரையில் சாக்கிர சொப்பன சுழுத்தி மூன்றும் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கும். தூலசரீரத்தில் நிகழ்வது சாக்கிரம், சூக்கும சரீரத்தில் நிகழ்வது சொப்பனம், காரண சரீரத்தில் நிகழ்வது சுழுத்தி. அவித்தையே தூலசூக்கும சரீரங்கட்குக் காரணமானதால் அது காரண சரீரம் என்னப்பட்டது. காரணம் ஒழிந்தாலன்றிக் காரியம் ஒழியாது. அதாவது காரண சரீரம் என்ற அவித்தை அல்லது நித்திரை யொழிய வேண்டும். மனம் அடங்கி ஞான சூரியன் உதயமானால்தான் அவித்தையாகிய இருள் நீங்கும். அப்போதுதான் சுழுத்தியோடு சொப்பனமும், நான் எனதென்னும் அகங்கார மமகாரங்கள் பொருந்திய இந்த அஞ்ஞான சாக்கிரமும் ஒழிய, தூங்காமற் றூங்குவதென்றும், சாக்கிரத்தில் சுழுத்தியென்றும் கூறப்படும் நினைவிற் சுழுத்தியாகிய சமாதி நிலை தோன்றும்.

"நனவிற் சுழுத்தி நிலை மேவி" என்று ஆன்றோர் அருளி யிருப்பது இந்நிலையே. 'இரவு பகலற்ற இடம்' என்றும் கூறப்படுவது இதுவே. அதாவது சகல கேவலமற்ற விடம். கேவலம் என்பதே சுழுத்தி. இங்கு சுழுத்தியுமில்லை, கனவுமில்லை, சாக்கிரமுமில்லை,

"ஆங்கார மற்றுன் னறிவான வன்பருக்கே
தூங்காத தூக்கமது தூக்கும் பராபரமே."
"நித்திரையும் பாழ்த்த நினைவுமற்று நிற்பதுவோ
சுத்த வருணிலைநீ செப்பாய் பராபரமே."

(தாயுமானவர்.)

மனோலயத்திற்கு அப்பியாசம் செய்யும்போதே கனவு ஒடுங்குவதை யனுபவமாய்க் காணலாம். ஆகையால் அவித்தை யொழிந்த ஞானிக்கு மட்டுமே கனவு இராது.

இப்பிரபஞ்சமும் கனவு போன்றதே என்று சாத்திரங் கூறுகிறது. ஞானமாகிய விழிப்பு வந்தால் அப்போது இவ்வுலகம் கனவுபோல் பொய் யென்பது அனுபவமாய்த் தெரியும். நாம் ஒவ்வொருவரும் அந்த விழிப்பை யடைய முயலவேண்டும். அதுவே மானிட ஜன்ம மெடுத்ததனு லடைய வேண்டிய பயனாகும். ஓம் தத் ஸத்.

சீடன்.

---

## தபால் கொள்ளைக்காரர்கள்.

(398-ம் பக்கத் தொடர்ச்சி.)

அம்பலவாணன் பயத்தோடு நடந்த உண்மையைக் கூறினான். ஆனந்த வின் நீ பேசாமல் அங்கேயே யிருந்திருக்க வேண்டும். சீக்கிரத்தில் உன்னை விடுதலை செய்துவிட்டிருப்பேன். இப்போது சட்டப்படி நான் உன்னை மறு படி சிறை செய்யவேண்டும் என்றான். அம்பலவாணன் திடுக்கிட்டுத் திகி லோடு, "அய்யோ! மறுபடி யென்னை யங்கா போகச்சொல்லுகிறாய்?" என்று பரிதாபமாய்க் கூறினான்.

ஆனந்த:—"இந்தப் போலீஸார்களில் யாருக்கேனும் நீ தெரியுமோ" என்றான்.

அம்ப:—யாருக்கும் தெரியாது.

ஆனந்த:—நல்ல காலம். வந்துவிட்டது வந்துவிட்டாய். யாருக்கும் தெரி யாமல் எங்காவது மறைந்திரு. இப்போது இங்கு பேச நமக்கு அவகாச மில்லை.

அம்ப:—மிக்க வந்தனம். ஒரு சங்கதிமட்டும் கூறிவிடு. இக்களவு செய்கிற வர்கள் யார்?

ஆனந்த:—"சாமிநாதனும் இரங்கநாதனுமே. நடக்குமிடம் மெயில் வண்டி யிலேயே. இனி நீ சீக்கிரம் போய்விடு" என்றான்.

அம்பலவாணன் உடனே செடிகளின் மறைவில் மறைந்துவிட்டான். போலீஸார் பழையபடி தங்கள் தங்கள் காவலிடத்திற்குச் சென்றார்கள்.

இரவு சுமார் 12 மணிக்கு மேலாய்விட்டது. அச்சமயம் இவர்கள் காத்துக்கொண்டிருக்கும் வீட்டிற்குள் இருந்து ஆத்திரமான கூச்சல்கள் கிளம்பியன. உடனே சிலர் கையில் இராந்தலோடு வெளியில் புறப்பட்

டார்கள். அவர்கள் நமது கோமளவல்லி தப்பித்துக்கொண்டு போய்விடவே அவளைத் தேடிச் செல்லவே இவர்கள் புறப்பட்டார்கள்.

ஆனந்தவின் சமயோசிதப்படி அவர்களைத் தாக்கிப்பிடிக்கும்படி தன் ஆட்களுக்குக் கட்டளை யிட்டுவிட்டான். கள்ளர்களுக்குப் போலீஸார் வந்திருக்கும் சங்கதி யப்போதுதான் தெரிந்தது. கள்ளர்கள் மூவரும் இரங்கநாதனும் சாமிநாதனும் வெளியில் வந்தார்கள். இரங்கநாதனே தலைவனாய் நடத்திவந்தான். கள்ளர் தலைவனாகிய ஜக்கன் சங்கதி யறிந்ததே கள்ள பாஷையில், "ஓகோ! போலீஸார்" என்று கூச்சலிட்டான். உடனே இரங்கநாதன் முதல் யாவரும் தாங்கள் நோக்கிவந்த திக்கைவிட்டு மறு திக்கில் அவரவர்கள் தப்பித்துக்கொள்ள ஓட்டமெடுத்தார்கள்.

அத்தோட்டத்திற்குப் பக்கத்தில் சற்றுதூரத்தில் ஹரியாறு ஓடுகிறது. அதற்கிடையில் கொஞ்சதூரம் புலங்கள் தோட்டங்கள் இருக்கின்றன. கள்ளர் வீட்டின் தோட்டத்தைக் கடந்ததும் அத்திக்கேயோடினார்கள். போலீஸாரும் பின்தொடர்ந்து சென்றார்கள். கொஞ்ச நேரத்திற்குள் போலீஸார் அவர்களை நெருங்கி விட்டார்கள்.

* * * * * *
* * * * *

ஒரு வாரத்திற்குள் நீ சாமிநாதனை மணம்புரிய வேண்டுமென்று இரங்கநாதன் கூறிச்சென்ற கெடுவு நெருங்கிவிட்டது. ஏழாவது நாள் வந்துவிட்டது. கோமளவல்லியின் மனம் மிக்க பரிதாப நிலைமைக்கு வந்துவிட்டது. எப்படித் தப்புவதென்று சிந்தித்தாள். வழி யேதாவது இருக்கிறதாவென்று சாளரத்தைப் பார்த்தாள். பயனில்லை. அதில் நெருக்கமாக இரும்புக் கம்பிகள் போடப்பட்டிருந்தன. கடவுளே கதியென்று சற்று நேரம் சிந்தித்தாள். அவள் மனதில் ஒரு யோசனை யுதித்தது.

அதாவது சாமிநாதன் வீட்டிலிருக்கும் வேலைக்காரியே அவளுக்கு வேளை வேளைக்கு ஆகாரம் கொண்டு வருவதும் காவல் காப்பதும். அவள் உள்ளத்தில் சற்று இரக்கமுள்ளவளென்றும் கோமளவல்லியின் மனதிற் பட்டது. இவள் சிந்தித்துக் கொண்டிருக்கையிலேயே அவள் அங்கு வந்தாள். கோமளவல்லி மிக்க பரிதாபமான குரலோடு அவளை நோக்கி,

"அம்மா! நான் இச்சமயம் உன்னையே யென் தேவதைபோல் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். ஏனெனில் நீ வெளிக்கு மற்ற பேர்போலவே தோன்றினும் உண்மையில் இங்கிருக்கும் துஷ்டரைப்போல் இரக்கமற்றவளல்ல. உன் உள்ளத்தில் கருணையும் இரக்கமும் இருக்கிறது." என்றாள்.

அம்மாது திடுக்கிட்டு வியப்படைந்து "குழந்தாய்! நீ கூறுவது உண்மையே. அந்தோ அன்று இரங்கநாதன் உன்னை யிங்கழைத்து வந்து

அடைத்துவைத்த போது என் மனம் பட்டபாடு கடவுளுக்கே தெரியும். அவன் ஏன் உன்னை யிப்படிச் சிறை வைத்திருக்கிறானோ தெரியவில்லை'' என்றாள்.

அதன்மேல் அக்கன்னிகை பரிதாபத்தோடு தன் குறைகளை யெல்லாம் அவளிடம் கூறி "அம்மா! நீயும் ஒரு காலத்தில் என் போல் கன்னிகையாயிருந்தவளே. இப்படி எனக்குச் சற்றும் விருப்பமே யில்லாத ஒருவனை மணம் புரியச்சொல்லி கட்டாயப்படுத்தினால் அதைவிடப் பிராணத்தியாகமாவது செய்து கொள்ளாமல் என்ன செய்வாய்; நான் இதை விட்டுத் தப்பித்துக்கொண்டு போய்விடமட்டும் கொஞ்சம் உதவி செய்தால் உனக்குப் பெரும் புண்ணியமாகும். இச்சமயம் என்னிடம் 50 லட்சம் ரூபாயிருந்தாலும் உனக்களித்து விடுவேன். அந்தோ 50 ரூபாயேயிருக்கிறது'' என்று கூறிக்கொண்டே தன் உள்மடியிலிருந்து ஒரு 50 ரூபா நோட்டை யெடுத்து அவளிடம் கொடுத்தாள்.

அம்மாது மனங்கரைந்து அக்கன்னிகையை நோக்கி "அந்தோ குழந்தாய் நீ இங்கிருந்து தப்பித்துக்கொண்டு போனாலும் நீ யெங்கு செல்வாய்'' என்றாள்.

**கன்னிகை:**—"அம்மா! நீ யென்னை விதைவிட்டு வெளிப்படுத்தி விடு. பிறகு நான் எப்படியாவது தப்பித்துக்கொள்வேன். நீ மட்டும் எப்படியாவது எனக்கு மனங்கரைந்து உன் மகள் போல் நினைந்து என்னை யெப்படியாவது வெளிப்படுத்தி விடு'' என்றாள்.

**அம்மாது:**—அய்யோ நான் அவனுக்கு என்ன பதில் கூறுவேன்.

**கன்னிகை:**—நீ எந்தச் சாக்காவது கூறிவிடலாம்.

**அம்மாது:**—"அய்யோ தெய்வமே! நான் என் செய்வேன்'' என்று பரிதபித்தாள்.

**கன்னிகை:**—"கடவுள் உனக்கு ஒரு கெடுதியும் வரவிடார். நீ செய்வது பெரும் புண்ணியமான வேலை. நான் என்றும் உன் நன்றியை மறவேன். எப்படியாவது நான் மேலான நிலைமைக்கு வருவேன். செல்வவதியா யிருப்பேனென்று எதுவோ என் மனதில் கூறிக்கொண் டிருக்கிறது. நீ என்னைக் காப்பாற்றுவதால் உனக்கு எள்ளளவு கெடுதியும் நேரிடாது. மனங்கலங்காமல் என்னைக் காப்பாற்று'' என்று கண்ணீர் பெருக வேண்டிக் கொண்டாள்.

வேலைக்காரியின் மனம் அம்மொழிகளைக் கேட்டதே கரைந்து இரக்கமுற்று, கடைசியில் அவள் இக்கன்னிகையைக் காப்பாற்றியே தீரவேண்டுமென்று துணிந்து விட்டாள்.

ஆகையால் கள்ளர் கூட்டம் கூடிப்பேசியபின், சாமிநாதன் அப்பெண்ணை யழைத்து வா வென்று இரங்கநாதனிடம் கூறுவதற்குச் சுமார்

ஐந்து நிமிடங்களுக்கு முன்புதான் வேலைக்காரி கோமளவல்லியை அழைத்துக்கொண்டுபோய்க் கட்டிடத்தைக் கடந்து வெளியிலுள்ள தோட்டத்தில் விட்டு விட்டுத் தான் வீட்டிற்குள் திரும்பினள்.

கோமளவல்லி தோட்டத்தின் ஒரு இருள் சூழ்ந்த மரத்தடியில் நின்று அச்சிறையிலிருந்து தப்பித்துக் கொண்டதற்காகச் சந்தோஷமடைந்து கடவுளைச் சற்று துதித்து, எந்தத்திக்கே செல்லலாமென்று யோசித்தாள். அதற்குள் வீட்டிற்குள்ளிருந்து பெருங்கூச்சலும் குழப்பமும் உண்டானது அவள் செவியில் விழுந்தது. உடனே அவளுக்குப் பெருந்திகில் உண்டாய் விட்டது.

மறு நிமிடம் ஜனங்கள் கையில் இராந்தல்களோடு ஓடி வருவதைக் கண்டாள். கள்வர் ஓடுவதையும் அவர்களைத் துரத்திக்கொண்டு போலீஸார் ஓடுவதையுங்கண்ட அக்கன்னிகை யாவரும் தன்னைத் தேடிக் கொண்டு வருவதாகவே நினைத்துக் கொண்டு சிங்கங்களின் கூட்டத்தைக் கண்ட மான் குட்டிபோல் இன்னதிக்கென்று கவனியாது கால் போன வழியே ஓட்டம் பிடித்தாள்.

(தொடரும்.)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

---

# விளம்பரம்.

## புதுச்சத்திரம் வியவசாய சங்கம்.

மகா-ா-ா-ஸ்ரீ இராசிபுரம் தாலூகா தாசில்தார் அவர்களின் பிரேரேபணையின்பேரில் இராசிபுரம் தாலூகாவிலுள்ள வியவசாயிகள் சகலருக்கும் அனுகூலமாயிருக்கும் பொருட்டு ஒரு வியவசாய சங்கம் புதுச்சத்திரத்தில் ஸ்தாபிக்கப்பட்டு, ஷை சங்கம் ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் முதல் சனிக்கிழமை பகல் 12-மணிக்கு புதுச்சத்திரத்தில் நடைபெற்று வருவதால் இந்த விளம்பரத்தையே பிரதி மாதங்களுக்கும் நோட்டீசாக வைத்துக்கொண்டு, ஒவ்வொரு மீட்டிங்குக்கும் ஒவ்வொரு மிராசுதாரர்களும், மிலக்சுவான்தாரர்களும், கிராமாதிகாரிகளும், தவராமல் ஆஜராய் சங்கத்தை நடைபெறச் செய்யவேண்டுமாய்க் கோறப்படுகிறது.

ஷை ஒவ்வொரு மீட்டிங்குக்கும் வியவசாய டிமான்ஸ்டிரேடர் வந்திருந்து குடிகளுக்கு வியவசாய சீர்திருத்தங்களை நிதர்சனமாயும் பிரசங்கத்தினாலும் போதிக்கிறார்.

மீட்டிங்கு நடைபெறும் தேதிகள்.

6-5-22, 3-6-22, 1-7-22, 5-8-22, 2-9-22, 7-10-22, 4-11-22, 2-12-22.

புதுச்சத்திரம்,
17-4-1922.

சோலை முத்துடையான்,
பிரசிடெண்டு.

## பொது விஷயங்கள்.

### ஓர் முக்கிய அறிவிப்பு.

### தபால் கட்டண உயர்வு.

சந்தாநேயர்கள் கீழ்க்கண்டவற்றை யவசியம் கவனிக்கக் கோருகிறோம் :—

1922ஞு எப்ரல் மாதம் 24-ம் தேதி முதல் தபால் கட்டணம், கார்ட் அரையணாவாகவும், கவர் ஒரு அணுவாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகையால், கடிதங்களுக்குப் பதில் விரும்புவோர் ரிப்ளை கார்ட் அல்லது ஒருஅணு தபாற்பில்லை யனுப்பினாலன்றிப் பதிலளிக்கப்படமாட்டாது. 24-4-22க்குப் பின் யாரேனும் காலணு கார்டின்மேல் இன்னொரு காலணு பில்லை யொட்டாமல் தபாலில் போட்டிருந்தால், அத்தகைய கார்ட்கள் தபாலதிகாரிகளால் அழிக்கப்பட்டுப் போயிருக்கும் என்று அறியவேண்டும். கார்டின் மேல் இன்னொரு காலணு பில்லையும், கவரின்மேல் இன்னொரு அரையணு பில்லையும் ஒட்ட மறக்கவேண்டாம்.

---

**குருடும் செவிடும் சம்பாஷித்தல்.**—மிஸ் வில்லெட்டா ஹக்கின்ஸ் என்ற குருட்டுப் பெண்ணும், மிஸ் ஹெலென் கெல்லர் என்ற செவிட்டுப் பெண்ணும் ஒருவர் கரங்களை மற்றவர் முகத்தின்மேலும், மார்பின்மேலும் வைத்துக்கொண்டு மிக்க சுலபமாகத் தங்கள் தங்கள் மனோபாவங்களை வெளியிட்டுச் சம்பாஷித்துக் கொள்கிறார்கள். மிஸ் ஹக்கின்ஸ் என்ற குருட்டுப் பெண் மிக்க அபூர்வமான கந்த உணர்ச்சியால் எந்த வஸ்துவையும் முகர்ந்து பார்ப்பதாலேயே அதன் நிறத்தைக் கூறிவிடுகிறாள்.

**உலகில் பெரிய நாணயம்.**—உலகத்தில் பெரிய நாணயம் பாரன் ஸெர்ப் என்பவரிட மிருக்கிறது. அது 1730ஞு போடப்பட்ட ஒரு செம்பு நாணயம். அது 10 அங்குல சதுரமும், ஆறரை இராத்தல் எடையு முடையது. அத்தகைய நாணயங்கள் ஸ்வீடன் தேசத்தில் 12-வது சார்லஸ் அரசர் காலத்தில் சாதாரணமாக வழங்கி வந்தன.

**மிக்க பலசாலி.**—சில சிறு பூச்சிகளோடு ஒத்திட்டுப் பார்க்கும் பட்சத்தில், மிக்க பலசாலி யென்று கருதப்பட்ட மனிதன் மிக்க பலஹீனனாகத் தோற்றுவான். ஒரு எறும்பு ஒரு கூழாங்கல்லைச் சரிவான விடத்தின்மேல் தள்ளிச் செல்வது ஒரு மனிதன் தனியே இருப்புப்பாதையில் ஒரு வண்டித் தொடரை யிழுத்துச் செல்வதற்குச் சமமாகும். ஒரு வண்டு தன் பாரத்தினும் 45 மடங்கு அதிகமான பாரத்தை யிழுக்கிறது. அதன்மேல் ஒரு தகரட் டப்பியைக் கவிழ்த்து விட்டபோது, தான் தப்பித்துக்கொள்ளத் தன்னிலும் 1800 மடங்கு பாரத்தை அது கிளப்பிவிட்டது.

---

### ஜீவிய சந்தாவில் புதியதாகச் சேர்ந்தவர்கள்.

1. Mrs. M. SINNAPPA,
   C/o Mr. M. SINNAPPA,
   Tinnevelly South, JAFFNA.

2. D. C. ARUNACHELAM CHETTYAR,
   26—32, Rattan Bazaar Street.
   MADRAS.

# " ஆனந்த போதினி " பஞ்சாங்கம்.

## துந்துபி௵ ஆனி௴—சாலிவாகனம் 1845—கலி 5024
## பசலி 1331—கோல்லம் 1097-98—ஹிஜரி 1340—41
## இங்கிலீஷ் 1922௵ ஜூன்௴-ஜூலை௴

| ஆனி௴ | ஜூன்௴ (1922௵ ஜூலை௴) | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | வியா | சஷ்50-13 | அவி-16-40 | சி-16-40ம | கரிநாள் |
| 2 | 16 | வெ | சப்56-18 | சதை-24-0 | சித்-60 | சர்வமுகூர்த்தம் |
| 3 | 17 | சனி | அ60-0 | பூரட்-31-43 | ம-31-43சி | திரிலோசன பூஜை |
| 4 | 18 | ஞா | அ2-28 | உத்-39-8 | அமி-60 | பிரயாணம் விலக்க |
| 5 | 19 | திங் | நவ8-3 | ரேவ-45-43 | சித்-60 | உபநயனம்,கோடியுடுத்த |
| 6 | 20 | செ | தச-12-40 | அசு-50-58 | சித்-60 | கரிநாள் |
| 7 | 21 | புத | ஏகா15-40 | பர-54-30 | சி54-30அ | சர்வ ஏகாதசி |
| 8 | 22 | வியா | துவ16-50 | கிரு-56-15 | மர-60 | கிருத்திகை |
| 9 | 23 | வெ | திர16-8 | ரோ-56-20 | ம-56-20சி | |
| 10 | 24 | சனி | சது13-43 | மிரு-54-40 | சித்-60 | சர்வத்திர அமாவாசை |
| 11 | 25 | ஞா | ● 10-5 | திரு-52-0 | சித்-60 | |
| 12 | 26 | திங் | பிர5-0<br>துதி59-18 | புன 48-20 | அ48-20சி | |
| 13 | 27 | செ | திரி53-10 | பூச-44-10 | சித்-60 | |
| 14 | 28 | புத | சது46-45 | ஆயி-39-50 | சித்-60 | |
| 15 | 29 | வியா | பஞ்40-23 | மக-35-33 | அ35-33சி | |
| 16 | 30 | வெ | சஷ்34-35 | பூர-31-33 | சித்-60 | |
| 17 | 1 | சனி | சப்28-55 | உத்-27-55 | மர-60 | |
| 18 | 2 | ஞா | அ23-53 | அஸ்-24-48 | சித்-60 | |
| 19 | 3 | திங் | நவ19-23 | சித்-22-13 | பி22-13அ | |
| 20 | 4 | செ | தச15-28 | சுவா-20-13 | சி2-013ம | சர்வ ஏகாதசி, |
| 21 | 5 | புத | ஏக12-3 | விசா-18-50 | சித்60 | |
| 22 | 6 | வியா | து9-28 | அனு-18-10 | சி-18-10பி | பிரதோஷம் |
| 23 | 7 | வெ | திர7-40 | கேட்-18-20 | ம18-20அ | |
| 24 | 8 | சனி | சது6-48 | மூல-19-25 | சித்-60 | வியாசபூஜை |
| 25 | 9 | ஞா | ○6-53 | பூரா-21-48 | சி21-43அ | பகலில் தனியநாள் |
| 26 | 10 | திங் | பிர8-33 | உத்-25-13 | ம25-13அ | ஆஷாடபகுளம் |
| 27 | 11 | செ | து11-58 | திரு-29-8 | சித்-60 | |
| 28 | 12 | புதன் | திரி15-30 | அவி-36-8 | பிர36-8சி | |
| 29 | 13 | வியா | சது20-43 | சதை43-8- | மர43-8சி | |
| 30 | 14 | வெ | பஞ்26-48 | பூரட்-50-53 | சித்-60 | பிரயாணம் விலக்க |
| 31 | 15 | சனி | சஷ்33-13 | உத்-58-38 | சி-58-38பி | கடகரவி நா. 54-40 |

| | | | |
|---|---|---|---|
| கே | | | சூ<br>பு |
| | 12உ ரி-பு<br>19- மிது-பு<br>24-சிம்-சு | | சு |
| | | | |
| | செ | | குரு<br>ரா-ச |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.